விலை ரூபா 1-25

ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 28 கார்த்திகை 6 ரபிஅவ் 19 இதழ் 284

யாழ்ப்பாணம் சனிக்கிழமை 22-11-1986

● இலங்கைத் தமிழ் மக்களைக் காப்பாற்ற

இந்தியா ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கவேண்டும்

புதுடில்லி, நவ. 21

'இலங்கைஇனப்பிரசனையை ஒரு முடிவுக்கு கொண்டுவர வேண்டும். அத்துடன் பாதிக்கப்படும் தமிழ் மக்களை காப்பாற்றுவதற்கு இந்தியா ஆக்கபூர்வமான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும்.'

இவ்வாறு கோரும் மசஜர் ஒன்றை இந்தியாவின் பெரும்பான்மையான கட்சிகள் அனைத்தும் ஒன்றினைந்து இந்திய அரசிடம் கையளிக்கவுள்ளன.

மேற்படி மசஜரில் பாரதீய ஜனதா கட்சியைச் சேர்ந்த எல் கே. அட்வானி, தெலுங்கு தேசம் கட்சியைச் சேர்ந்த பி. உபேந்திரா மற்றும் இந்திஜித்குப்தா சி. பி. ஐ. எஸ் பி. மலாவியா லோக்தள், ஏ. ஜி குல்சர்ணி காங்கிரஸ் எஸ், வி கோபாலசாமி என் வி எம். சோமு தி. மு. க, ஆலடி அருணா அ இ. தி. மு க. ஆகியோர் கையெழுத்திட்டுள்ளனர், [கூ-எ]

● யாழ்.கோட்டை இராணுவமுகாமிலிருந்து

எரிகுண்டு, ஷெல் தாக்குதல்

நால்வர் பலி; பத்துப்பேர் காயம்

பத்துக்கடைகள் பலத்தசேதம்

(அலுவலகநிருபர்)

யாழ். கோட்டை இராணுவமுகாமிலிருந்துநேற்று அதிகாலையிலிருந்து; ஏவி விடப்பட்ட பயங்கர ஷெல் தாக்குதலுக்கு மலையகம், காத்தான்குடி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த நால்வர் பலியானார்கள் 10 பேர் படுகாயமுற்றனர். நகரில் உள்ள எட்டுக்கடைகள் பலத்த சேதமடைந்தன. மேலும் இருகடைகள் தீக்கிரையாகின.

காலையில் நடந்த தாக்குதலில் 'எரிகுண்டு' பாவிக்கப்பட்டதாகவும், இதனால் இருகடைகள் தீப்பற்றியதாகவும், தெரிவிக்கப்பட்டது. உடனடியாக தீயணைக்கும்படை விரைந்துவந்து பொதுமக்களின் உதவியுடன் தீயை அனைத்தது.

மலையக இளைஞரான சுந்தரம் காலையில் அபாயச்சங்கு ஊதியதைக் கேட்டு ஓடோடிச் சென்று மண்மூடை அரணுக்குள் செல்வதற்குமின், 'ஷெல்' விழுந்து வெகுத்ததினால் அவர் மூளை சிதறி அவ்விடத்தில் பலியானார்.

தேற்று மாலை வாழைக்குலைகள் வியாபாரம் செய்யும் பகுதியில் விழுந்த 'ஷெல்'லால் மட்டக்களப்பு காத்தான்குடியைச் சேர்ந்த அப்பதுல் ஸலாம் (23 வயது), அப்துல் அமீன் (25 வயது) ஆகியோரும் சுமார் 35 வயதுள்ள ஒருவரும்

(5ம் பக்கம் பார்க்க)

'ராணுவத்தின் அராஜக செயலைக் கண்டிக்கிறோம்'

யாழ். வர்த்தகர் சங்கம்

யாழ்ப்பாணம், சனி

தமிழ் மக்களின் உயிர் உடமைகளை திட்டமிட்டு அழிக்கும் சிறிலங்கா ராணுவத்தின் அராஜகச் செயலை நாம் வன்மையாக கண்டிக்கிறோம்'

யாழ் கோட்டை இராணுவ முகாமிலிருந்து நேற்று மேற்கொள்ளப்பட்ட எரிகுண்டு தாக்குதலினால் வர்த்தக நிலையங்கள் சேதமாக்கப்பட்டதையும் பொதுமக்கள் பலியானமை மற்றும் காயமடைந்தமையையும் கண்டித்து யாழ் வர்த்தக சங்கம் இவ்வாறு அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

(5ம் பக்கம் பார்க்க)

● தமிழ் போராளிகளின்

செய்தித்தொடர்பு சாதனங்கள் தமிழ்நாடு பொலிசாரால் பறிமுதல்

லண்டன் நவ 21

சென்னையிலுள்ள சகலதமிழ் போராளி அமைப்பின் தலைமையகத்திலிருந்த செய்தித் தொடர்பு சாதனங்கள் அனைத்தும் தமிழ்நாடு பொலிசாரினால் கைப்பற்றப்பட்டுள்ளதாக பி.பி.ஸி அறிவித்தது

தமிழ்நாடு அரசின் மேற்படி செயல் 'நண்பன் ஒருவனுக்கு செய்த பாதகமான செயல்' என்று தமிழீழ விடுதலைப்புலிகளின் சார்பில் பேசிய ஒருவர் வருத்தம் தெரிவித்துள்ளார்.

பேச்சுக்கள் நிராகரிக்கப்பட்டதே இந்திய அரசின் இந்த வகையான் புதியபோக்கு குகாரணமென அரசியல் அவதா

(5ம் பக்கம் பார்க்க)

பொதுமக்கள் பலர் பலி

[நமது நிருபர்]

முல்லைத்தீவுப் பகுதியை சுற்றி வளைத்து தேடுதல் முயற்சியில் ஈடுபட்ட படையினர் பல பொது மக்களை சுட்டுக் கொன்றுள்ளதாக அறியப்படுகிறது

முல்லைத்தீவு கரையோரப் பகுதி தீவிர கண்காணிப்புக் குட்படுத்தப்பட்டுள்ளதாகவும் ஹெலிகொப்டர்கள், விமானங்கள் மேற்படி நடவடிக்கையில் ஈடுபடுத்தப் பட்டுள்ளதாகவும் மேலும் பொதுமக்கள் வீடுகளை விட்டு வெளியேற முடியாத நிலையில் பெரும் அச்சம் கொண்டுள்ளதாகவும் அறியப்படுகிறது

இதேவேளை முல்லைத்தீவு மாவட்டத்தில் துணுக்காய், பாண்டியன்குளம், ஆகியஉதவி

(5ம் பக்கம் பார்க்க)

விஜிதரன் விவகாரம்:

'உண்ணாவிரதம் நீடித்தால் பாரதூரமான விளைவு ஏற்படும்'

உபவேந்தர் அச்சம்

யாழ்ப்பாணம், சனி

யாழ். பல்கலைக் கழக மாணவன் விஜிதரன் காணாமற் போனது தொடர்பாக பல்கலைக் கழகத்தில் மேற்கொள்ளப்பட்டிருக்கும் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டம் நீடிக்குமாயின் சில தினங்களில் பாரதூரமான விளைவு

[5ம் பக்கம் பார்க்க]

மக்கள் விடுதலைப் படையின் தாக்குதலுக்கு 6 இராணுவம் பலி

யாழ்ப்பாணம், சனி

முல்லைத்தீவு மாவட்டத்தில் தமது மக்கள் விடுதலைப்படை நடத்திய தாக்குதலில் ஒரு கவசவண்டியும் ஒரு ஜீப்வண்டி முற்றாகச் சேதமடைந்தயும் துடன் அதில் இருந்த 6 இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் தமது தரப்பில் ஒரு

5ம் பக்கம் பார்க்க)

மூன்றாவது நாளாக நேற்று உண்ணாவிரதம்

யாழ்ப்பாணம், சனி

யாழ். பல்கலைக்கழக மாணவன் அ. விஜிதரன் கடத்தப்பட்டது தொடர்பாக பல்கலைக்கழக மாணவ அமைப்பினால் ஆரம்பிக்கப்பட்ட "சாகும் வரை உண்ணாவிரதம் நேற்று மூன்றாவது நாளாக அனுஷ்டிக்கப்பட்டது

நேற்றைய உண்ணாவிரதப் போராட்டத்தில் உண்ணாவிரதிகளுக்கு அனுதபாமும், ஆதரவும் தெரிவிக்கும் வகையில் பொதுமக்கள் பலரும், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி மாணவர்களும் கலந்து கொண்டனர்.

சாகும்வரை உண்ணாவிரதம் அனுஷ்டிக்கும் இராமலிங்கம் குகதாஸன் என்னும் மாணவனின் தாயார் திருமதி இராமலிங்கம் சிவக்கொழுந்

(5ம் பக்கம் பார்க்க)

பொய்ப்பிரசாரங்களையும் அவதூறுகளையும் நம்பாதீர்

—கிட்டு

யாழ்ப்பாணம், சனி.

இப்புனிதமான விடுதலைப் போராட்டத்தின் போது யார் என்ன அவதூறுகளையும் பொய்ப்பிரசாரங்களையும் மேற்கொண்டாலும் அவற்றை நம்பவேண்டாமென்றும் எடுக்கப்பட்ட முடிவில் இருந்து இம்மியளவும் வழுவியது கிடையாது என்பதற்கு கடந்த காலவரலாறு சான்று பகரும் என்றும் தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ்குடாநாட்டுத் தளபதி திரு. கிட்டு நேற்று விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

"தமிழீழத்திற்கான விடுதலைப் போராட்டம் முன்னெடுத்து வருகின்ற இவ்வேளையில் 350 ற்கும் அதிக

[5ம் பக்கம் பார்க்க]

எவ்வகையிலும் பிரச்னை தீர்ந்து மக்கள் நிம்மதியாக வாழவேண்டும்

—அமிர்

சென்னை, நவ 21

"பெங்களூரில் நடைபெற்ற இலங்கை இனப்பிரச்னை தீர்வுக்கான பேச்சுக்களில்எவரெவர் வபங்குகொண்டனர் என்பது குறித்து பிரச்னை இல்லை. எந்தவகையிலும்இனப்பிரச்னையானது தீர்வுகண்டு மக்கள் நிம்மதியாக வாழவேண்டும்."

தமிழர் விடுதலைக்கூட்டணியின் செயலாளர் நாயகம் திரு, அ. அமிர்தலிங்கம் பெங்களூரில் நடைபெற்ற 'சார்க்' மாநாட்டின்போது இலங்கை, இனப்பிரச்னைகுறித்து இந்திய-இலங்கைதலைவர்களுக்கிடையேயான பேச்சுக்கள் குறித்து கருத்துவெளியிடுகையில் இவ்வாறு கூறினார்.

இதேவேளை, இலங்கைஅரசு பெங்களூரில் இந்தியப் பிரதமரிடம் சமர்ப்பித்த புதியஆலோசனைகள் ஏற்கனவே கூட்டணி குழுவினருக்கும் இலங்கை அரச

[5ம் பக்கம் பார்க்க]

வரி விளம்பரம்

விற்பனைக்கு

Nel Farm பிறவுன் சேவற் குஞ்சுகள் 25ந் திகதி செவ்வாய்க்கிழமையும், Golden Comet சேவற்குஞ்சுகள் 30ந் திகதி ஞாயிற்றுக்கிழமையும் விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்க. சற்குணராசா பிறதர்ஸ், பிரம்படி கொக்குவில். (C-5942)

தரமான 36 அங்குல Paper Cutter) பேப்பர் கட்டர் விற்பனைக்குண்டு. தொடர்புக ஆனந்தன், சுடுவிழுந்தான் தெல்லிப்பழை. [C-5944]

தரமான அரிசி, மாட்டுத்தின், கோழித்தின், முட்டை ஆகியவற்றை இங்கே பெற்றுக் கொள்ளுங்கள். யாழ். அரிசிக் களஞ்சியம், ஸ்ராண்லி வீதி (ஸ்ரீதர் தியேட்டர் முன்பாக) யாழ்ப்பாணம். (C 5781)

கட்டசிசு இயந்திரங்கள் [Typewriters], Portables Standard உடன் விற்பனைக்கு Fudo Enterprises, Jaffna Road, Manipay. (Bank of Ceylon Bitsman அருகாமையில்) (C-5918)

Prima Poultry Food எல்லா வகையான பிறிமா கோழித் தீனும், மருந்து வகைகளும், ஒருநாள் கோழிக்குஞ்சுகளும் விற்பனைக்குண்டு. Nallur Farm Centre, நல்லூர் விடியோ செண்டர், 19, முருகேசர் லேன், முத்திரைச் சந்தை, நல்லூர். C 5706

நேரத்தை மிகுதிப் படுத்த கையால் இழுத்து வறுத்த "அரிசிமா" எங்களிடம் கிடைக்கும். 500 கிறாம் பெக்கட் ரூபா 9-50 வியாபாரிகளுக்கு விஷேசகழிவு M G M. 777 K K S. Road 208. 1St Cross St Jaffna. T P 22611 [C-5065]

கல்வி

7ம் ஆண்டு [6ம் வகுப்பு] 1987ம் ஆண்டில் கல்விகற்க விரும்பும் முதல் இரண்டு அதி கூடிய புள்ளியை எடுக்கக்கூடிய மாணவர்களுக்கு இலவசக்கல்வியை போதிக்கமுன்வந்துள்ளோம் விண்ணப்ப முடிவுத் திகதி 5-12-1986. போட்டிப் பரீட்சை 8/12, 9/12 காலை 9 மணிக்கு கணிதம், மொழி Modern Education Centre, Karaveddy. (C-5927)

(தரம் 9) 10ம் ஆண்டில் கல்விகற்க விரும்பும் மாணவர்களில் அதிகூடிய புள்ளிகளை எடுக்கக்கூடிய முதல் 3 மாணவர்களுக்கு 1987ம் ஆண்டு இலவசக்கல்வியை போதிக்க முன்வந்துள்ளோம். பரீட்சை விண்ணப்ப முடிவுத் திகதி 5-12-86. (7/12 9-30—11-30 விஞ்ஞானம், (8/12) 9 30—11-30 கணிதம், (9/12) 9-30—11-30 தமிழ் மேற்குறிப்பிட்ட திகதிகளில் போட்டிப்பரீட்சை நடைபெறும். Science Centre Karaveddy. [C-5925]

சேவை

கைரேகை, இரகசியம், என்சோதிடம் என்பனவைக் கொண்டு தங்கள் வாழ்வின் உண்மை நிலை கூறப்படும். மணமகள் மணமகள் தேவை யானவர்கள்செவ்வாய்க் குற்ற முள்ள சாதகர்களும்] சகல மதத்தவர்களும் தொடர்பு கொள்ளலாம் பிரபல கை ரேகை என்சோதிட நிபுணர், செ. நாகேந்திரராசா 174/16 கோவில் வீ தி, நல்லூர், கைலாசபிள்ளையார் கோவி வடி. C 5772

தேவை

வீணை ஆசிரியர் தேவை: உடன் தொடர்புகொள்ளவும்: முகவரி: 51/1, கன்னுதிட்டி ரோட், யாழ்ப்பாணம் [C-5930]

மணப்பந்தல்

விஸ்வப்பிரம்மகுல 36 வய துடைய அரசினர் கல்லூரியில் கடமையாற்றும் ஆங்கில ஆசிரியைக்கு மணமகன் தேவை. தகுதியுடையோர் சாதகக் குறிப்புடன் விபரமாக விண்ணப்பிக்கவும் விளம்பர இல. C-5938, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம் (C-5938)

வகுப்புக்கள்

Spoken English புதிய பிரிவு இருமணித்தியால வகுப்புக்கள் செவ்வாய், வியாழன் மாத்திரம். காலை 7 மணி — 9 மணி; ஆரம்பம்: 27-11-86. S. B. Iyar, 12, வைமன் வீதி, நல்லூர். [C-5946]

பொறிமுறைப்பட வரைஞர் Radio and T.V. வயரிங் புதிய பிரிவுகள் ஆரம்பம்: 26-11-86 புதன் Able Technical Studies, கே.கே.எஸ்.ரோட், சுன்னாகம். [C-5921]

Radio TV வயரிங், வெல்டிங் Draughtsmanship, Quantitysurveying 23-11-1986-ல் ஆரம்பமாகவுள்ளது. விபரங்களுக்கு:- Teeigon Technical Institute ஆடியபாதம் ரோட், (அம்மன்கோவில் முன்பாக) திருநெல்வேலி. C 5894

திருக்குடும்பக் கன்னியர் மடம்
(ஆங்கில பாடசாலை)

பழைய மாணவர் கவனத்துக்கு

1980, 1981 க. பொ. த. (சாதாரணம்) பரீட்சைக்கான கல்வி அமைச்சின் சான்றிதழ்கள் கிடைக்கப்பெற்றுள்ளன சம்பந்தப்பட்ட மாணவர்கள் பாடசாலை அதிபர் அலுவலகத்துக்கு வந்து பெற்றுக்கொள்ளவும்.

[பிறரிடம் கையளிக்கப்படமாட்டாது]

அதிபர்,
திருக்குடும்பக் கன்னியர் மடம் (ஆங்கிலம்),
[C-5939] யாழ்ப்பாணம்.

INSTITUTE OF TECHNICAL STUDIES, VADDUKODDAI.

பல்கலைக்கழக அனுமதிகள் (வெளி நிலை) 1987/88.

(i) பல்கலைக்கழக பாட நெறிகளான
★ கலைமாணி (B. A) ★ வர்த்தகமாணி (B Com.)
★ விஞ்ஞான மாணி (புள்ளிவிபரவியல் B. Sc.)
ஆகியவற்றுக்கான விரிவுரைகள் 6-12-86ல் ஆரம்பமாகின்றன.
விண்ணப்பப் பத்திரங்களை நிறுவனத்தில் நேரில் பெற்றுக்கொள்ளலாம்.

(ii) Diploma in Draughtsmanship [Civil and Mechanical]
ஜனவரி 1987ல் ஆரம்பமாகின்றன.
விண்ணப்ப முடிவு திகதி 31-12-1986.

மேலதிக விபரங்கட்கு நிறுவனத்துடன் தொடர்பு கொள்க.

[C-5906] பணிப்பாளர்.

பிரயாண ஒழுங்கு

டுபாய் - கட்டடப்பகுதி வேலையாட்கள்
(Construction Labourers)
150 பேர்

அத்துடன்

பாஸ்போட், BOND, விசா ரிக்கற்றிங் ஆகியனவும் செய்து கொடுக்கப்படும்.

யூனிவேர்சல் ஏஜென்சி

125 (455) ஸ்ராண்லி வீதி,
யாழ்ப்பாணம்.

[ஆயுர்வேதக் கல்லூரிக்கு அருகாமையில் பெற்ரோலியக் கூட்டுத்தாபனத்திற்கு முன்பாக]

(A 2888)

Sales Representative

யாழ்ப் குடாநாட்டினுள் தினமும் பாவனையிலுள்ள பொருட்கள் விற்பதற்கு அனுபவம் வாய்ந்த முயற்சியுடைய விற்பனைப் பிரதிநிதி தேவை.

மாதச் சம்பளமும் விற்பனையில் கொமிஷனும் வழங்கப்படும்.

இரு நற்சான்று பத்திரங்களுடன் முன்னைய அனுபவம் பற்றிய விபரங்களையும் குறிப்பிட்டு இரு நடுவர்களின் பெயர்களுடன் 30-11-86க்கு முன்னதாக விண்ணப்பிக்கவும்.

C/o ஈழநாடு, விளம்பர இலக்கம்: A-2880,
யாழ்ப்பாணம்.

(A-2880)

நவீன முறையில் அமைந்த

R.S.R. Green Peking Palace
CHINESE RESTAURANT

காலை 9-00 மணி முதல் இரவு 11-30 மணி வரை சேவை புரிகின்றனர்.

அன்பான உபசரிப்புடன் அமைதியான சூழ் நிலையில், அநுபவம் வாய்ந்தவர்களால் தயாரிக் கப்பட்ட உணவு வகைகள். குடும்பத்தாருடன் வந்து பிரத்தியேக அறைகளில் (Special Family Rooms) உணவை அருந்திச் செல்ல யாழ்நகரில் ஒரே ஒரு ஸ்தாபனம்;

R. S. R. GREEN PEKING PALACE,
4-th Cross Street, Jaffna.
T. P. 23873.

also,

உங்களுக்குதி தேவையான Short-eats, Ice-Creams இவைகளுடன் Lunch Parcel உடனுக்குடன் செய்து கொடுக்கப்படும்.

ஓடர்களும் ஏற்றுக்கொள்ளப்படும்.

[A-2893]

கேள்வி அறிவித்தல்

மரத் தளபாடங்கள் விநியோகம்

கல்வித் திணைக்களம், யாழ்ப்பாணம்.

01. மரத் தளபாடம் வழங்குவதற்கான வழங்குநராகத் தம்மை அரசாங்கத் திணைக்களங்களிற் பதிவுசெய்துள்ள வழங்குநர்களிடமிருந்தும், பாடசாலை அபிவிருத்திச் சங்கங்களிடமிருந்தும் மேலுள்ள விடயங்கள் சம்பந்தமாக அரசுக்கு முத்திரையிடப்பட்ட கூறுவிலைகள் [இணைப்படிவங்களில்] யாழ்ப்பாணம், நல்லூர் கல்வித் திணைக்களம், பிரதேச கல்விப் பணிப்பாளர் 1986, நவம்பர் மாதம், 28-ம் திகதி, வெள்ளிக்கிழமை காலை 10-00 மணி வரை ஏற்றுக்கொள்வார்:-

1. புத்தகத் தட்டு (இரண்டு பக்கமும் கதவற்றவை) 6' 0'' 10'' 3' 6'' — 08
2. சஞ்சிகைத் தட்டு 6' 3' 10' — 08
3. நூலகர் மேசை 5' 2' 4'' 2' 8'' — 04
4. வாசிப்பு மேசை 6' 6'' X 3' X 2' 4'' — 04

02. ஒவ்வொரு விடயத்திற்குமான விலைகள் கூறுமாறு நீங்கள் வேண்டப்படுகிறீர்கள். வழங்கலுக்கான திட்டவட்டமான கட்டளை இடப்படும்போது உற்பத்தி செய்யப்படவேண்டிய பொருட்களின் சரியான எண்ணிக்கை அறிவிக்கப்படும்.

03. இத்தளபாட வகைகள், கீழே குறிப்பிடப்பெற்றுள்ள மரவகைகளில் ஏதாவதொன்றில் செய்யப்படுதல் வேண்டும். அத்துடன் அவற்றின் கைவினைத்தரம் மிகச் சிறந்ததாகவிருத்தல் வேண்டும். பயன்படுத்தப் பெற்ற மரத்தின் தரம் அல்லது கைவினைத்தரம் எதிர் பார்க்கப்படும் நியமத்திற்கேற்ப இல்லாதவிடத்து குறித்த தளபாடம் நிராகரிக்கப்படும்.

04. திட்டவட்டமான கட்டளையிடப்பெற்ற தேதியில் இருந்து மூன்று [3] கிழமைகளுக்குள் வேலை முடிக்கப் பெறுதல் வேண்டும்.

05. இத்தளபாடத்தைச் செய்வதற்குப் பயன்படுத்த வேண்டிய மரவகைகள் பின்வருமாறு:-

முதிரை, தேக்கு,
வேம்பு, காட்டாமணக்கு.

06. கூறுவிலைகளைத் திறத்தல்:-

கூறுவிலைகளைத் திறக்கும் போது கேள்வியாளர்கள் சமுகமாயிருக்கலாம் சமுகமாயிருக்கும் கேள்வியாளர்களுக்குக் கூறுவிலை விதங்கள் வாசித்துக் காட்டப்படும். சமர்ப்பிக்கப்பெற்ற கூறுவிலைகளின் இணைப் பிரதியை ஆய்வு செய்வதற்கும் அவர்கள் அனுமதிக்கப்படுவர்.

கூறுவிலைகள், 1986, நவம்பர் மாதம் 28ஆந் தேதி வெள்ளிக்கிழமை காலை 10-30 மணிக்குத் திறக்கப்படும்.

இ. சுந்தரலிங்கம்,
பிரதேச கல்விப் பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.

பணிப்பாளர் அலுவலகம்,
கல்வித் திணைக்களம்,
நல்லூர்,
யாழ்ப்பாணம்; [A-3137]

ஈரானுக்கு இரகசிய ஆயுத விநியோகம்:

றீகன் மீது கண்டனங்கள் பலமடைந்து வருகின்றன!

வாஷிங்டன், நவ 2

அமெரிக்க காங்கிரஸின் (பாராளுமன்றம்) இருசபைகளிலும் ஈரானுக்கான இரகசிய ஆயுதவிநியோகம் தொடர்பாக அதிபர் றீகன் மீது பலத்த கண்டனங்கள் தெரிவிக்கப்பட்டுவருகிறது. இந்த ஆயுத விநியோகத்தில் நேரடியாக ஈடுபட்டவர் எனக்கூறப்படும் திரு. றீகனின் முன்னாள் பாதுகாப்பு ஆலோசகர் றொபேர்ட் மக்பாலன் தமது தவறை ஒப்புக்கொண்டுள்ளார்.

அமெரிக்க அதிபர் அமெரிக்காவின் சட்டதிட்டங்களை ஈரானுக்கான ஆயுத விநியோகம் மூலம் மீறியுள்ளார் என்று அமெரிக்க காங்கிரஸ் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

திரு. றீகனின் குடியரசுக் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களும் அவரைக்கண்டித்திருப்பது குறிப்பிடத்தக்க அம்சமாக உள்ளது.

திரு. டேவிட்டியுறன் பேர்க் என்ற செனட்டர், றீகன் தமது இரகசிய ஆயுத விநியோகம் குறித்து காங்கிரஸில் தெரிவித்திருக்கலாம் என்று தெரிவித்தார். இவர் றீகனின் குடியரசுக்கட்சியைச் சேர்ந்தவராவார்.

இதேவேளை இந்த ஆயுத விநியோகத்தில் நேரடியாக ஈடுபட்டவர் எனக்கூறப்படும் திரு றீகனின் முன்னாள் பாதுகாப்புத்துறை ஆலோசகர் திரு. றொபேர்ட்மக்பாலன் தாம் செய்தது ஒரு தவறான காரியம் என்று தெரிவித்துள்ளார்.

திரு றீகனின் இந்த ஆயுத விவகாரம் அவரை மேலும் சிக்கலுக்குள்ளாக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கையில் தீவிரவாதப் பிரச்னை அரசதுருப்பினரால் எழுந்தது

பெங்களூர், நவ. 21

"இலங்கையில் தீவிரவாதப் பிரச்னையானது, அந்நாட்டுத் துருப்புக்கள் தமிழருடன் நடந்துகொண்ட முறையினாலேயே எழுந்தது."

இவ்வாறு இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி பெங்களூரில் அண்மையில் தெரிவித்தார். 'சார்க்' அமைப்பின் உச்சிமகாநாட்டில் 'பயங்கரவாதம்' பற்றிய பிரச்னை எழுந்தபோதே இதனை அவர் கூறினார்.

'பயங்கரவாதம்' பற்றிய வரைவிலக்கணமானது 'பயங்கரவாதிகள்' தத்தம் நாடுகளுக்கு நாடு கடத்தப்படின் எதிர்நோக்கக்கூடிய பிரச்னைகளிலும் தங்கியுள்ளது எனவும் ராஜீவ் கூறினார்.

கல்கத்தாவில் சோதனை குழாய் குழந்தை

புதடில்லி, நவ 21

கல்கத்தாவில் முதல் சோதனைக் குழாய்க் குழந்தை நேற்று முன்தினம் தனியார் மருத்துவமனை ஒன்றில் பிறந்தது.

டாக்டர்கள் உதவியுடன் மூன்று கிலோ நிறையுள்ள ஆண்குழந்தை வெற்றிகரமாக பிறந்ததாக வைத்திய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்தியாவில் இது இரண்டாவது சோதனைக்குழாய் குழந்தையாகும்.

தென் லெபனானில் மோட்டார்கார் குண்டு 7 பேர் மரணம்!

பெய்ரூட், நவ 21

தென்லெபனானில் மோட்டார்கார் குண்டு வெடிப்பில் மூன்று சமாதானப்படை இராணுவவீரர்கள் உட்பட 7 பேர் கொல்லப்பட்டனர்.

தென்லெபனானின் துறைமுகநகரில் நேற்று இச்சம்பவம் இடம் பெற்றது.

மோட்டார்கார் ஒன்றில் வந்த நபர் ஒருவர் அக்காரின் பின்புற இருக்கையில் வைக்கப்பட்டிருந்த குண்டை வெடிக்க செய்து தாமும் உயிரிழந்தார்.

இக்குண்டு வெடிப்பிலேயே அருகே நின்ற மூன்று பிஜி நாட்டைச் சேர்ந்த இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டனர்.

இம்மூவரும் ஐ நா சமாதானப் படைப்பிரிவில் உள்ளவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

தென்லெபனான் துறைமுகத்தில் நின்ற படகொன்றை இஸ்ரேலியப்படைகள் நேற்றுப் பலமாகத்தாக்கின. இதற்குப் பதிலடியாகவே இந்த குண்டு வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

ஆப்கானிஸ்தான் அதிபர் கார்மால் இராஜினாமா!

காபுல், நவ 21

ஆப்கானிஸ்தான் அதிபர் பதவியிலிருந்து திரு. பார்பரா கார்மல் விலகியுள்ளார். இவர் 1979-ம் ஆண்டிலிருந்து இப்பதவி ய வகித்து வந்தார்.

திரு பார்பராகார்மல், ஆப்கானிஸ்தான் மக்கள் கம்யூனிஸ்ட் ஜனநாயகக்கட்சியின் பொதுச் செயலாளர்பதவியிலிருந்து கடந்த மே மாதம் பதவி நீக்கஞ் செய்யப்பட்டார் அன்றிலிருந்து இக்கட்சியின் செயலாளராக திரு நஜிபுல்லா நியமிக்கப்பட்டார்

ஆப்கானிஸ்தானில் கிளர்ச்சியாளர்களின் நடவடிக்கைகளை ஒடுக்கத் தவறியமையாலேயே திரு கார்மல் செயலாளர்பதவியிலிருந்து நீக்கப்பட்டார். ஆயினும் அவர் ஆப்கானிஸ்தானின் அதிபராக தொடர்ந்து பதவியிலிருந்து வந்தார்.

நேற்று அவர் இப்பதவியிலிருந்து இராஜினாமாச் செய்துள்ளது. ஆபகான் அரசியலில் ஒருதிருப்பத்தை ஏற்படுத்தியுள்ளது

திரு. கார்மல் [வயது 55] சுகயீனம் காரணமாகவே தமது பதவியைத்துறந்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. ஆனால் சோவியத் அரசின் நெருக்கடி காரணமாக இவர் பதவியைத் துறந்திருக்கலாம் என மேற்கத்தேய அரசியல் அவதானிகள் தெரிவித்தனர்.

பனிமழையினால் 500 வாகனங்கள் மூடப்பட்டுள்ளன!

ஸ்ரீநகர் நவ, 21.

ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் ஏற்பட்டுள்ள கடும் பனிப்புயல் காரணமாக சுமார் 500 வாகனங்கள் பனிமழையினால் மூடப்பட்டுள்ளன.

இந்திய இராணுவ விமானப் படை வீரர்கள் இந்தவாகனங்களில் இருப்போரைக் காப்பாற்றுவதில் தீவிரமாக ஈடுபட்டுவருகின்றனர்.

இதுவரை சுமார் 100 மோட்டார் வாகனச்சாரதிகள் இந்த பணிப்புயல் ஆபத்திலிருந்து உயிர் காப்பாற்றப்பட்டுள்ளனர். இவர்களில் பலர் பலத்த காயங்களுக்குள்ளாகியுள்ளனர்

இதேவேளை இந்த பனிப்புயல் காரணமாக இறந்தோர் எண்ணிக்கை 37 ஆக உயர்ந்துள்ளது. 18சடலங்கள்நேற்று கண்டெடுக்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

இலங்கை மக்களை ஐக்கியப்படுத்த மதகுருமார் முயற்சி செய்யவேண்டும்

— பிரதமர் பிரேமா

[கொழும்பு செவ்]

இலங்கை மக்களனைவரையும் ஐக்கியப்படுத்தும் இயக்கமொன்றை அனைத்து மதங்களின் தலைவர்களும் கூட்டாக ஆரம்பிக்கவேண்டும்"

இவ்வாறு பலாங்கமவில் பொது நிகழ்ச்சியொன்றில் உரையாற்றுகையில் பிரதமர் பிரேமதாசா வேண்டுகோள் விடுத்தார்.

திரு. பிரேமதாசா மேலும் தமதுரையில் நாட்டு மக்களை ஒற்றுமைப்படுத்தும் முயற்சியில் மதகுருமார் தீவிரமாக ஈடுபடவேண்டுமெனவும் கூறினார். [ஊ]

ஆய்வு நிறுவனத்தின் தீர்மானம்

யாழ்ப்பாணம் சனி

சமகாலப் பிரச்னைகளைப் பற்றி தமிழில் வெளிவந்த சிறுகதை, நாவல், குறுநாவல், ஆகியவற்றைத் தொகுத்து வெளியிடுவதற்கு ஆய்வு நிறுவனம் தீர்மானித்துள்ளது

படைப்பாளிகள் தங்களுடைய ஆக்கங்களின் பிரதிகளை டிசம்பர் 15ம் திகதிக்கு முன்னர் ஆய்வு நிறுவனம், 81/1, காங்கேசன்துறை வீதி, கொக்குவில் என்னும் விலாசத்துக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்படுகின்றனர். [மா]

இலங்கையில் முதல் முதலாக

தேசிக்காய் வாசனையுடன்

எம்டீ சோப்

115g ரூபா 2/-

650g ரூபா 12/00

இதே விலையில் இதைவிட சிக்கனமானதும் சிறந்ததுமான வேறொரு சவர்க்காரம் வாங்க முடியுமா..... இன்றே வாங்குங்கள்

புதிய எம்டீ சோப்

எம்டீ என்ரபிறைஸ்,

14, 16, கைத்தொழிற்பேட்டை – அச்சுவேலி.

[A-746]

மணிவாக்கு

காவியத்தின் கதாநாயகன் பற்றி என்னிடம் பேச வேண்டாம்; எங்கள் இளமையே எங்களுக்கு பெருமை தரும் காலம்.

—ஆங்கில மகாகவி பைரன்

நமது நோக்கு

பிரித்தாளும் போட்டிக்கு பலியாகாதீர்

அட்சர கணிதத்தில் சில (Factors) எல்லோரும் தொல்லையைக் கொடுக்கவல்லது நீண்ட பின்னத்தில் சில காண்பது சங்கடமானது. இதற்கு உதவிசெய்பவர் ஆங்கில கணிதமாமேதையும் தத்துவஞானியுமான பேட்ரண்ட் ரஸல். ஆனால் அவரை நோபல் பரிசு பெற்றதனால் கியத்துக்கு.

தமது சரித்திரகால நகைச்சுவைப் பண்புடன் அவர் இவ்வாறு குறிப்பிடுகின்றார்: "எங்கள் சிறுநாடு மாபெரும் நாடாகிய இந்திய மாளவ அரசாங்கம் ரகசியம் என்ன கூடையிலும் மாநாடுகள் கூட்டத்தை கிழக்கொண்டு ஆலோசனை காரத்தை நீடிக்க மீண்டும் அவர்களைப் பிரித்துவைக்க முடியுமானால் ஆட்சி எளிதாகும்."

ஆங்கிலேயரின் ஆட்சி முறைக்குறித்த இக்கூற்றே அவர் குறிப்பிடும் 'சிக்கல்'களுக்குப் பெயரிட்டார். அதுவும் லத்தீன் மொழியில்; Divide et Impera= Divide and Rule← பிரித்து ஆள் என்பது கருத்து

இந்தியாவில் நீண்டகால ஆட்சி ஈடாட்டம் கண்ட கட்டத்தில் பாகிஸ்தான் சிற்பி ஜின்னா இந்தவுத்திக்கு முடிவு கட்டினார். "நீங்கள் எங்களை ஒற்றுமைப்படுத்தி சுதந்திரம் வழங்குவதாகச் சொல்லுகிறீர்கள்; ஒற்றுமை வராதென்ற நம்பிக்கை உங்களுக்கு உண்டு. எனவே தயவுசெய்து எங்களைப் பிரித்துவிட்டு வெளியேறுங்கள்" என்றார் மதி நுட்பம் நிறைந்த சட்ட நிபுணர் ஜின்னா அவர்கள்.

மகாத்மா காந்தி, நேரு போன்ற இலட்சியவாதிகளை முறியடித்துவிட்டார் ஜின்னா. நாடு பிரிந்ததும், சுதந்திரம் வந்ததும் ஒரே நாளில், ஒரே நேரம். இரட்டைப் பிறப்பைத் தவிர்க்க ஒருநிமிட வித்தியாசம்; ஆகஸ்ட் 14பாகிஸ்தான், 15 இந்தியா.

தமிழர் வணங்கும் தெய்வங்களைப் பார்ப்போம்: ஆயிரம்பேர் சொல்லி, ஒரு கடவுளைத்தான் வணங்கும் போதும் அந்த ஆயிரத்தையும் ஒன்றுக்கொன்று போரிடவைத்து; அடியார்களும் போட்டி போடுகின்றனர். மனித இயற்கையை நாம் தொழும் தெய்வத்தில் ஏற்றிக் காண்பதாலும் உலக விடயங்களில் நாம் பிணைத்திக்கொள்வது ஓரளவிற்கு மாறுத நோய் எனலாம்.

மாறுத நோய்க்கும் இன்றைய மருத்துவம் அதிர்ச்சி அளிக்கும் சிகிச்சை முறையில் மிக அற்புத மருந்துகள் கண்டுபிடிக்கிறது.

இலங்கைத் தமிழருக்கு இந்த 'அதிர்ச்சி' சிகிச்சை முறை இன்று பழக்கமாகிறது. எனவே எந்தப் பெருஞ்சாதி நரியானாலும் பிரித்தாளும் தந்திரம் புலியில் பலிக்குமாவென்ற சந்தேகத்தை ஏற்கனவே எழுப்பியிருந்தோம்.

இன்று எமக்கு முதலமைச்சர் யார் என்பதல்ல பிரச்சினை; பல்லாயிரக்கணக்கான மக்கள் பலிபோன பின் ஒங்கு ஒருகுட்டி ராஜதானி அமைத்து அதற்கொரு முதலமைச்சர் கிடைத்துவிட்டால் சுதந்திரமாக நாம் வாழலாமா? இத்தகைய ஏமாற்றத் திட்டங்கள் இன்று போராக மாறி நாட்டை நிச்சயம் அழித்துவிடும்.

இஸ்ரேலின் காற்று இலங்கையில் பட்டாலே நாடு லெபனானை மாறிவிடும்; இன்று அதற்குரிய அறிகுறிகள் அதிகம்; அவற்றைய விளக்க, ரூஸ்வெல்ளமேர், காந்தி, நேரு போன்றோர் காட்டப்படும் அதேநேரத்தில் கிழக்கிலங்கை வாழைச்சேனை, வாகரை, வத்தாறுமூலை, வரலை, கிரிமலை, கரடியனாறு போன்ற (மோசே பேசும்) இடங்களில் இலங்கை ராணுவம் வழமைபோல் 'பயங்கரவாதிகளை' சுட்டுத்தள்ளுகின்றது.

'இதற்கு தீர்வுகாண என்னால் முடியாது' என்று பகிரங்கமாகவே தெரிவித்திருக்கிறார் ஜனாதிபதி ஜெயவர்த்தனா. இது உண்மை நிலையென்பதை இலங்கை ராணுவம் போகுமிடமெல்லாம் உண்டாக்கும் அராஜகத்தில் காணமுடிகிறது.

நாடாளுமன்றத்திலும் இந்த நிலை உருவாக அதிககாலம் எடுக்காது. இஸ்ரேல் போன்ற பயங்கரவாதத் தன்மைத்துவம் இதற்கு உதவ தயாராக இருக்கும்.

'சொல்லவல்லன்', ஹாம்லெட் சொல்வது போல "சொல்லைச் செயலுக்கு திருமணம் செய்து வைக்கும் திறமையுடையவனாக வேண்டும்; அப்போது தான் நடிகரின் திறமை சபையைக் கவரும்"

இலங்கை அரசுக்கு எவ்வித அழைப்புமின்றி ஆஜரான 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' போன்ற பத்திரிகைகளுக்கு நாடாண்ட பத்து வருட ஆட்சியில் 'நேர்மைக்கு' இடமுண்டா என்ற சந்தேகம் பரவி வருவது நாட்டின் இன்றைய சாபக்கேடு என்பது தெரியாது.

இலங்கைப் பிரதி நீதி மந்திரி சொல்வதை ஆட்சியில் எத்தனைபேர் ஆதரிக்கின்றனர்? 'யுத்தத்துக்கு தயாராவது அழிவுக்குத் தயாராவதாகும்" என்கிறார் ஷெல்டன் ரணராஜா. மக்கள் அழிவை நிறுத்தவல்ல சமதான திட்டம் சக்தியத்தில் உருவாக வேண்டும்.

'கிழக்கில் செயலாகிவரும் 'மாக்கியவல்லி' தந்திரங்கள்

திக்கவயல் சி. தர்மகுலசிங்கம்

இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு மாகாண சபையினை இறுக்கிப் பிடித்திருக்கும் அரசு அதன்சபைபற்றி இடையிடையேபேசி, ஒரு மாதத்திற்கு ஒருமுறையாவது உள்நாட்டுப் பிரச்சினைக்கு வெளிநாட்டுப் போர் விமானங்களை உபயோகித்து வருகின்றது வடக்கும், கிழக்கும் இணையக் கூடாது என்பதிலே அதிதீவிரமாக இருக்கும் அரசு, இரண்டும் இணைவதற்கு அது ஒரு தொடராக இல்லையே என்ற கருத்தையும் முன்வைத்துள்ளது அத்துடன் அங்கு சிங்கள மக்களின் குடிசனச் செறிவையும் 83-ம் ஆண்டிலிருந்து எடுத்துக் காட்டியுள்ளது. இது நீதியற்ற செயல் மந்திரமன்று; தமிழின ஒழிப்பில் கிழக்கு மாகாணத்தில் ஒரு 'மாக்கியவல்லியின் தந்திரங்கள் கட்டவிழ்த்துவிடப்பட்டு வெற்றியடைந்திருப்பதாகவே எண்ணவேண்டும்

இத்தாலியின் மாபெரும் அரசியல் எழுத்தாளனும், கவிஞனுமான மாக்கியவல்லி மறுமலர்ச்சிக் காலத்திற்குச் சற்றுப் பின்னே வாழ்ந்தவன். உலகம் உன்னை எவ்வாறு நடத்தியதோ அவ்வாறே நீ உலகினை நடாத்து என்ற தத்துவத்தின் வழிகாட்டி அவரே! ஒரு சிறுபான்மை இனத்தின் தனித்துவத்தை எவ்வாறு அழிக்கலாம் என்பதற்கு அவர் பல உபாயங்கள் சொல்லியுள்ளார்.

இந்தச் சித்தாந்தங்களை ஹிட்லர், முசோலினி என் போர் தலையணையின் கீழ்வைத்துப் படித்தார்கள்; செயற்படுத்தினார்கள். அவ்வாறான தந்திரங்களை யாவும் செயற்பாட்டின் அடிப்படையில் கிழக்கு மாகாணத்தில் அரசினால் மேற்கொள்ளப்பட்டன எனக் கருதவேண்டியுள்ளது.

ஓர் இனத்திற்குச் செய்ய வேண்டிய கொடுமைகளை ஒரேயடியாகச் செய்து முடித்து விடு பின்பு படிப்படியாக அவர்கட்கு நன்மை செய்துவா. அவர்கள் உனது பழைய கொடுமைகளை மறந்துவிடுவார்கள் என மாக்கியவல்லி எழுதிவைத்தார் இன்று திருகோணமலை நகரத்திலுள்ள 10ம் வாரிட்டிலிருந்து குப்புறுப்பிட்டி, நிலாவெளி ஈறாகவுள்ள மக்களும், மூதூர்த் தொகுதியிலுள்ள கட்டைபறிச்சான் தொடங்கிக் கூனித்தீவு ஈறாகவுள்ள மக்களும் பாரம்பரியத்தில் அகதிகளாகியுள்ளனர் இவ்வாறு பல வந்தமாக அந்நியர்களைக் கட்ட இம்மக்கள் அரசாங்கம் கொடுக்கும் மானியமும், அரிசியையும், சீனியையும் நம்பியிருப்பது மாக்கியவல்லியின் கூற்றையே ஞாபகப்படுத்துகின்றது. இவ்வாறு ஒரு தொகுதியில் தொடராக விருந்த மக்களை அகதிகளாகக் கணக்குவிட்டு இணைப்பிற்குப் பதிலாக இன ஒழிப்பையே அரசு காட்டுகின்றது.

ஓர் இனத்தின் பாரம்பரியத்தை முறியடிக்கவேண்டுமாயின் அவ்வினத்தின் மத்தியிலே பெரும்பான்மை இனம் குடியேற்றங்களை உண்டுபண்ணவேண்டுமென மாக்கியவல்லி எழுதிவைத்தார். மாக்கியவல்லி தனது கோட்பாட்டின் கலபின அரசாங்கத்தை விரும்பியதேயில்லை கிழக்கு மாகாணத்தில் உண்டாக்கப்பட்ட கல்லோயா, கந்தளாய், சேருவில குடியேற்றத் திட்டங்கள் தமிழ் மக்கள் சங்கிலிக் கோர்வையாகத் திருகோணமலையிலிருந்து மட்டக்களப்பு வரை வியாபிப்பதற்குத் தடை செய்ய எடுத்த முயற்சிகளே! அது மாத்திரமன்றி ஸ்ரீமாபுரம், அபயபுரம் மிதந்தபுரம், சந்தளாய் என்பன தமிழ் மக்களின் பிரதேச ஒருமைப்பாட்டுக்குக் கொடுக்கப்பட்டசவால்களே! இவ்வகையிற் செய்யப்பட்ட குடியேற்றம் தமிழ் மக்களை வடக்கு நோக்கி அகதிகளாக்கியது மாத்திரமன்றி, மாக்கியவல்லியின் தந்திரங்கள் கிழக்கு மாகாணத்தில் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டதையே காட்டுகின்றது! பெங்களூருக்குஎடுத்துச் செல்லப்பட்ட சிங்கள மக்களின் குடிசனப் பரம்பல் (கிழக்கு மாகாணம்) மாக்கியவல்லியின தந்திரங்களையே நினைவூட்டுகின்றன!

வருடத்திற்கு வருடம் Ferguson Directory) இலங்கையின் சகல மாவட்டங்களினது குடிசனப் பரம்பலையும் வெளியிட்டு வருகின்றது. இதில் எடுக்கப்பட்ட சில புள்ளி விபரங்கள் (கிழக்கு மாகாணம்) பின்வருமாறு:-

1953ம் ஆண்டில் திருகோணமலையின் குடிசனம் 1,38 553 ஆக இருந்தது. அப்போது இக்குடிசனத் தொகையின் 65% தமிழ் மக்களாக இருந்தனர். இந்தக் குடிசனம் 1983ல் ஆண்டில் 2 56,750 ஆக மாறியது. 1953ம் ஆண்டிலிருந்து இனரீதியாக மனிதர்களைப் பிரிவிடாத 'Ferguson Directory' 83-ம் ஆண்டில் மூன்று இனமக்களின் குடிசனப் பரம்பலைப் பின்வருமாறு விரித்துரைக்கின்றது.

தமிழர்கள் — 86,743
சிங்களவர்கள் — 86 341
முஸ்லிம்கள் — 74,403
(மிகுதி ஏனைய சாதியினர்)

1953ம் ஆண்டில் சனத்தொகையின் 65% மான இடத்தைப் பெற்ற தமிழ்மக்கள் எவ்வாறு திட்டமிடப்பட்ட குடியேற்றம்மூலம் சிறுபான்மை யினராகியுள்ளனர் என்பது வேடிக்கையானது அது மாத்திரமன்றிப் பெங்களூருக்கு எடுத்துச் செல்லப்பட்ட புள்ளி விபரங்களில் சிங்கள மக்களின் புள்ளிவிபரம் 96 000ஐ அடைந்

(5ம் பக்கம் பார்க்க)

'தியான வழியில்தான் மனநிம்மதி பெறமுடியும்'

ஆறுமுகம் கந்தையா

உலகில் காசு பணம், சொத்துச் சுகம், பட்டம் பதவி எது இருந்தாலும் ஏனோ மனதுக்கு நிம்மதி ஏற்படுவதில்லை. மனிதன் அமைதியைத் தேடி ஓடினாலும் அது எங்குளது? (எங்கோ உளது!) என்ற ஐயம். எப்படிக் கிட்டும் என்ற ஏக்கம் இவற்றில்தான்; இவற்றில் தான் வாழ்க்கை நடந்து கொண்டிருக்கின்றது. இந்த

[இன்று (22-11-86) நல்லை ஆதீனத்தில் 'பஜனாவளி' நூல்வெளியீட்டு விழா இடம் பெறுகின்றது; இதனை இக்கட்டுரையாளரே வெளியிட்டுள்ளார்.]

உலகியற் பொருட்கள் ஆன்ம அமைதி இவற்றைச் சீர்தூக்கிக் கணித்த நம் முன்னோர்கள் நியாய வழியில்தான்-வழியால் தான் மன நிம்மதி - நிறைவு பெறமுடியும்; சுமைதி-நிம்மதி எல்லாம் வெளிப் பொருட்களில் இல்லை; உள்ளத்தின் உள்ளேதான் ஒளிந்துகொண்டுள்ளன என்ற முடிவுக்கு வந்தனர்.

இந்தக் காலச் சக்கரச் சுழற்சியில்-சூழலில் - இயந்திர யுகத்தில் அன்றாட உடற் பிரச்சினைகளுக்கே சுவனம்செலுத்த வழியின்றித் திக்குமுக்காடுகின்றோம். இந்நிலையில் எளிதாக-இனிதாக மன அமைதிபெறுவதற்கு இந்த இறைபற்றிய துதிகளே ஏற்றசாதனங்கள் எனலாம்.

வடமொழிச் சுலோங்களில் எவ்வளவோ அபூர்வமான-அழகான துதிக்கனிகள் மண்டிக் கிடக்கின்றன. நம்மிற் பலருக்கு அவற்றின் பொருளுணர்ந்து படித்துக் களிந்துருகவாய்ப்பு இல்லாதுளது. அவ்வரிய செல்வங்கள் அருந்தமிழில் பெயர்க்கப்படுமாயின் மிகநன்று அத்தகைய பணியினை பல அன்பர்கள் பல ஆண்டுகளுக்கு முன்பே ஆற்றியுள்ளனர். அதே மெருகுடன், அதே எதுகை மோனையுடன் தமிழ்ப்படுத்தியுள்ளனர். அவைப் போது வெளிவந்த பஜனாவளிகளில் இவற்றைத் தொகுத்து இப்போது ஒன்றாக உருவாக்கி உங்கள் முன உலவவிடுகின்றோம் - உங்கள் கைகளில் தவழச் செய்துள்ளோம்.

உள்ளத்தைத் தூய்மைப்படுத்தி உருக்வைத்துப் பாவசமாதியை உண்டுபண்ணுவது திவ்விய நாமசங்கீர்த்தனம் எனச் சுவாமி சிவானந்தர் அருளியுள்ளார்கள். இந்த

கையை பஜனைப் பாடல்களை அனுதினமும் மனனம்செய்து வரவேண்டும். நிலைப்பேறு, அமரத்தன்மை என்ற இந்த இருமையுமுடைய அரிய - பெரிய பாராயணங்கள் இப்பஜனாவளிகளிலுள. இறைப்பற்றுனரும், மெய்யன்பர்களும், நன்னெறி நாட்டத்தினரும் நல்ல வகையிற் பயன்படுத்தி நாளும் மனனம் செய்து நற்பலன் நிரம்பப் பெறுவார்களாக. கையில் வைத்து, மனதிற் பதித்து, வாயாற் துதித்துப் போற்ற வேண்டிய புதையல் இப்பனுவல் எனலாம்.

இத்துதிகளைத் துதித்து எல்லோரும் எல்லா நலமும் பெற இறையருள் இறைஞ்சுகின்றேன் - இறைவன் திருவருள் பரவுகின்றேன்.

1991 இன் சனத்தொகை

கொழும்பு, வெள்ளவத்தை

இலங்கையின் சனத்தொகை 1991ம் ஆண்டில் ஒரு கோடியே 75 இலட்சமாக இருக்கும் என இலங்கை குடி சனத்தொகை மதிப்பீட்டு நிலையம் கணித்துள்ளது.

இதேவேளை இலங்கை சனத்தொகையில் 4ம் சதவீதமானோர் 20 வயதுக்குட்பட்டோர்களெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கிழக்கில்

(4ம் பக்கத் தொடர்ச்சி)

துள்ளது

தொடராகஇல்லாத ஒரு பிரதேசத்திற்கு ஒரு சிறுபான்மை இனம் பாரம்பரியம் கொண்டாடப்படாது என்றால், புதிதாக உருவாக்கப்பட்ட சிங்களத் தேர்தற் தொகுதியான சேருவலவிற்குள் பெரும்பான்மையாகத் தமிழ் மக்கள் வாழ்ந்த பன்குளத்தை இணைத்தது நீதியானதா?

அம்பாறை மாவட்டத்தின் கதை!

அம்பாறை மாவட்டம் தமிழ் பேசும் மக்கள் பெரும்பான்மையினராக வாழ்ந்த பிரதேசமே; ஆனால் இங்கு சிங்கள மக்களைப் பெரும்பான்மையினராக்குவதற்கு மொனராகலை மாவட்டத்துடன் இருந்த மகா ஓயாவையும், பதியத்தலாவையையும் அம்பாறையுடன் இணைத்தது! இதனால் சிங்கள மக்களின் எண்ணிக்கை 25 519 ஆக அதிகரித்தது அம்பாறை என்ற அழகான பெயரும் திகாமகாடுல்லவாகத் திரிந்தது தமிழ் பேசும் மக்களின் பாரம்பரியத்தை அழிப்பதற்காகத் தங்கவேலாயுதபுரக் கொலைகளும் நடந்தேறின! 1947ல் 3000 ஆக இருந்த சிங்கள மக்களின் இறை குடிசனம் 81ம் ஆண்டு 1 46 371 ஆகவும் 83ம் ஆண்டில் 1, 61,483 ஆகவும் அதிகரித்துள்ளது அம்பாறையின் மாவட்ட மொத்தக் குடிசனம் 388 786 ஆகும்

இதில் அதிக பெரும்பான்மையினராக இருக்கும் முஸ்லீம்களை விடச் சிங்கள மக்கள் 15 110 கூடக் காணப்படுகின்றனர் இது திட்டமிடப்பட்ட குடியேற்றத்தின் விளைவே! ஒரு இனத்தின் பாரம்பரியத்தைத் திட்டமிட்ட குடியேற்ற மூலம் மாற்றலாம் என்ற மேற்கு நாட்டுமாக்கியவல்லியின் தந்திரம் கிழக்கு மாகாணத்தில் வெற்றியடைந்துள்ளது.

மட்டக்களப்பு

டொனமூர்த் திட்டம் இலங்கைக்குக் கொண்டு வரப்பட்ட போது மட்டக்களப்பு மாவட்டத்தில் 252 சிங்கள மக்களே இருந்தார்கள் 83ம் ஆண்டின் குடிசனப் பரம்பல் பின்வருமாறு:

மொத்தக் குடிசனம்...... 330,899

தமிழர்...... 234,348

தமிழ் பேசும் முஸ்லீம்கள் 79,317

சிங்களவர்கள் 10 643

திட்டமிடப்பட்ட குடியேற்றங்களால் தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசங்களைப் பறிப்பது மூலம் ஒரு தீர்வைத் தமிழ் மக்களுக்குக் கொடுக்கலாம் என்பது ஏற்புடையது அல்ல சிறுபான்மை இனமாகப் பெங்களூரில் வாழும் தமிழ் மக்களின் உணர்வுகளை கர்நாடகத்தினரால் முறியடிக்க முடியவில்லை.

அந்த மேடையிலே இப் புள்ளிவிபர நாடகம் வெற்றியடையுமா என்பதைக்காலம் விரைவில் சொல்லும்.

4வது வாரம்
வெலிங்டன்
திரையில்
10-30, 3-30, 6-30
சிவகுமார்-ராதிகா
கவுண்டமணி
கல்லாப்பெட்டி சிங்காரம்
நடித்த
நிலவு சுடுவதில்லை
(கலர்)

லிடோ
10-30, 2-30, 4-30, 6-30
ROMANCING THE STONE
(Action and Thrills)
[Coluor]

நடவடிக்கை எடுக்கப்படும்

யாழ்ப்பாணம், சனி

''ஆபாசப்படக் காப்பிகள் வைத்திருந்தாலோ, காண்பி ஆபாசப்படங்கள் காண்பித்தாலோ அது தண்டனைக்குரிய குற்றமாகக்கருதப்பட்டு மால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.''

இவ்வாறு யாழ் மாவட்ட சினிமா ஒன்றியம் ஆபாசப் படக்கொப்பிகள் சம்பந்தம நேற்று விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருபதாவது:

மினிசினிமா ஒன்றியத்தின் கண்காணிப்புப்பிரிவினரால் நேற்று முன்தினம் ஆபாசப் படக்கொப்பிகள் சில கைப்பற்றப்பட்டன இவை வாடகைக்கு விடப்பட்ட படக்கொப்பிகளாகும். இப்படக்கொப்பிகளை வாடகைக்குக்கொடுத்தவரை இனங்கண்டு அவ்விடம் இருந்த ஆபாசப் படக்கொப்பிகள் பறிமுதல் செய்யப்பட்டதுடன் அவருக்கு அபராதமும் விதிக்கப்பட்டது. [வா]

மூன்றுவது

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

துவும் நேற்றைய உண்ணாவிரதத்தில் பங்குபற்றியிருந்தபர்

இந்த உண்ணாவிரதப் போராட்டத்தை ஆதரித்து காங்கேசன்துறை வீதி, தட்டா தெருச் சந்தி ஆகிய இடங்களில் யாழ். இந்துக் கல்லூரி மாணவர்கள், இந்து மகளிர் கல்லூரி மாணவிகளும் வீதி மறிப்புப் பேரராட்டத்தை நடத்தினர். புத்தூர், உருப்பிராய் ஆகிய இடங்களிலும் இப்போராட்டம் நடைபெற்றது.

எனினும் யாழ. இந்துக்கல்லூரி யாழ். இந்து மகளிர் கல்லூரியினர்நடாத்திய வழிமறிப்புப் போராட்டத்திலும் தட்டாதெருச்சந்தியில் நடைபெற்றவழிமறிப்புப் போராட்டத்திலும ஒரு சில அசம்பாவிதங்கள் நடைபெற்றன யாழ் பல்கலைக்கழக மாணவர் அமைப்புக் குழுவினரின் அறிக்கையில் மேற்படி விபரங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன

விஜிதரனை

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கள் ஏற்படக் கூடுமென பல்கலைக் கழக உபவேந்தர் பேராசிரியர் சு வித்தியானந்தன் தெரிவித்துள்ளார்.

இது சம்பந்தமாக பேராசிரியர் சு வித்தியானந்தன் விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவித்திருப்பதாவது:-

விஜிதரன் காணாமற் போனது தொடர்பாக பல்கலைக் கழக மாணவர் ஐவர் [இரு பெண்கள் உட்பட] பொதுமக்களில் ஒருவர் சாகும் வரை உண்ணாவிரதம் ஆரம்பித்து நேற்றுடன் மூன்றாவது நாள் ஆகிறது. சாகும்வரை உண்ணாவிரதம் மேற்கொள்ள வேண்டாமென்று இவர்களைக் கேட்டபோதும் அவர்கள் தாம் சாகும்வரை உண்ணாவிரதம் இருப்பதற்கு உறுதி பூண்டுள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

இச் சம்பவம் காரணமாக தொடர்ந்து ஏறக்குறைய மூன்றுகிழமைகள் பல்கலைக் கழகம் இயங்க முடியா நிலையிலுள்ளது மேலும் இந்நிலை நீடிக்குமாயின் என்னநிலை ஏற்படுமோ என அஞ்சவேண்டியுள்ளது.

எனவே விஜிதரனைக் கண்டு பிடித்துத் தருமாறு அல்லது அவர்பற்றிய உண்மையான தகவல்களைத் தருமாறு விடுதலை ஸ்தாபனங்களையும் பிரஜைகள் குழுக்களையும் ஏனைய பிரமுகர்களையும் மற்றும் பொது மக்களையும் கேட்டுக் கொள்வதுடன் முயற்சிசெய்து விரைவில் இதற்கொரு முடிவு காண்பதற்கு உதவுமாறு தயவுடன் கேட்டுக் கொள்ளுகின்றோம். [வா]

நாலுவாரகால சிறைத்தண்டனை

கொழும்பு, வெள்ளி

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி இயக்க உறுப்பினர் ஒருவருக்கு கொழும்பு மேல் நீதி மன்றம் 4 வாரகால சிறைத்தண்டனை விதித்துள்ளது.

ருக்கோவிலைச்சேர்ந்தஎஸ். ரமணன் என்பவருக்கே இத் தண்டனை விதிக்கப்பட்டது

இவர் இதே இயக்கத்தைச் சேர்ந்த கந்தசாமி என்பவரால் நடத்தப்பட்ட வகுப்புகளில் கலந்து கொண்டதுடன் அது பற்றி தகவல் கொடுக்கதவறியிருந்தாரென பயங்கரவாத தடைச்சட்டத்தின்கீழ் குற்றம் சாட்டப்பட்டிருந்தார்.

கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதி திரு வீரரட்ண முன்னிலையில்அண்மையில் இவ்வழக்கு விசாரணைக் கெடுக்கப்பட்டபோது ரமணன் தம் மீதான குற்றச்சாட்டை ஒப்புக்கொண்டிருந்தார் இவர் சார்பில்ஆஜரான சிரேஸ்ட சட்டத்தரணி இவர் மீதான கண்டனையைக்குறைக்கும்படி நீதிமன்றத்தில் வேண்டுகோள் விடுத்ததையடுத்து இவருக்கு நீதிபதி 4 வார சிறைத்தண்டனை விதித்தார் (கே)

எவ்வகையிலும்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

குழுவினருக்கும் இடையே கொழும்பில் நடைபெற்றபேச்சுக்களை அடிப்படையாகக் கொண்டதே தவிர புதியதொன்றுமில்லை'' என்று திரு சந்திரஹாசன் புதுடில்லியில் தெரிவித்துள்ளார். (எ)

பொய்

[1 ம் பக்கத் தொடர்ச்சி]

மான எமது அங்கத்தவர்கள் இப்போராட்டத்தில் தம் இன்னுயிர்களை எமது மண்ணின் விடிவிற்காக தியாகம் செய்துள்ளனர். அவ்வாறு எமது இளம் வேங்கைகள் விலைமதிக்க முடியாத தமது உயிர்களை களத்தில் பலி கொடுத்துக் கொண்டிருகையில் இப்போராட்டத்தை திசை திருப்புவதற்காகவும் எம்மை எமது மக்களிடம் இருந்து பிரிப்பதற்காகவும் சில தீய சக்திகள் எம்மை பற்றி பலதரப்பட்ட வதந்திகளையும் அவதூறுகளையும் பரப்பிவருகின்றனர்.

எனவேதான் நாம் நமதுமக்களுக்கு ஒன்றைக் கூறவிரும்புகிறோம் இப் புனிதமானவிடுதலைப்போராட்டத்தின்போது யார் என்ன அவதூறுகளையும் பொய்ப் பிரச்சாரங்களையும் எம்மைப் பற்றி மேற்கொண்டால் அவற்றை நம்பவேண்டாமென்று கேட்டுக்கொள்கிறோம். நாம் எடுத்த முடிவிலிருந்து இம்மியளவும் வழுவியதுகிடையாதென்பதற்கு எம்முடைய கடந்த காலவரலாறு சான்று பகரும். எம்மைப் பற்றிப் பொய்ப் பிரசாரங்களில் ஈடுபட்டுள்ள தீயசக்திகளின் கடந்த கால போராட்ட வாழ்க்கை முறையை எடுத்துப் பார்ப்பார்களேயானால் அவர்கள் யார் என்று உங்களுக்குப் புரியும்.

எனவே மீண்டும் நாம் உங்களுக்கு கூறவிருப்புவது யாழ் குடாநாட்டில் சிறிலங்கா அரசின் கூலிப்படைகளின் பெரும் தாக்குதல்களை எதிர்நோக்கிக் கொண்டிருக்கும் இன்றைய நாட்களில் முப்படையினதும் எவ்விதமான தாக்குதல்களிலிருந்தும் எமது மக்களையும். எமது மண்ணையும் நாம் இறுதி வரை போராடிக் காப்போமென உறுதிகூறுகின்றோம்

''எம்மக்களே நீங்களும் அரச கூலிப்படைகளின் தாக்குதல்களின் போது போராடும் எம்முடன் உங்களால் இயன்றளவு பங்கை வகிப்பதன் மூலம் போராட்டத்தினை வெற்றியடையச் [செய்யுங்கள்''

தமிழ் ஈழ இராணுவம் அறிக்கை

யாழ்ப்பாணம், சனி

கோட்டை முகாமிலிருந்து பொது மக்கள் மீது நேற்று அதிகாலையில் இருந்து இராணுவத்தினரால் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட நவீனரக ஷெல் தாக்குதலை எதிர்த்து தமிழீழ இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதலில் இராணுவத்தினர் தரப்பில் பலத்த சேதமேற்பட்டுள்ளதாக மேற்படி அமைப்பு தெரிவித்துள்ளது.

தமிழ்ப்போராளி

[1ம் பக்கத் தொடர்ச்சி]

னிகள் கருதுகிறார்கள்,

இதேவேளை தமிழீழ விடுதலை இயக்கத்தின் [டெலோ] தலைவர் திரு. செல்வம் இந்திய வெளிவிவகார அமைச்சின் வேண்டுகோளின் பேரில் புதுடில்லி சென்றுள்ளார் இனப்பிரச்சனைக்கான இலங்கை அரசின் தீர்வைமேலும் பரிசீலனை செய்யும் வகையிலேயே திரு செல்வம் அழைக்கப்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகிறது. [எ]

எரிகுண்டு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பலியானார்கள். இவர்கள் மூவரும் வியாபாரிகள் எனத்தெரிவிக்கப்படுகிறது. அடையாளம் காணபபடாதவரின் சடலம் யாழ் ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

யாழ் நவீனமார்க்கட்டில் நின்றபோது முருகானந்தன் என்பர் காயமடைந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். குருநகரை சேர்ந்த அசிஸ், எம தியாஸ் (யாழ்ப்பாணம்) ராசிக், சுந்தரமூர்த்தி [40 வயது] உட்பட 10 பேர் காயமடைந்ததனர்.

யாழ். பெரிய ஸ்பத்திரிக்கு செல்ல முடியாத நிலைமையிருந்ததினால் காயமடைந்த சிலர் தனியார் சிகிச்சை நிலையங்களுக்கு சென்றனர்.

பஸ் நிலையத்திற்கு எதிரிலுள்ள விரபாகு ஸ்தாபனம் மீது ஷெல் விழுந்ததினால் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது காங்கேசன்துறை வீதியிலுள்ள பஞ்சு கடை தீப்பற்றி எரிந்தது, பின்னர் தீயணைக்கும் படையினால் அணைக்கப்பட்டது

இரண்டு பாய்க்கடை ஒரு வெத்திலைக்கடை, ஒருபுகைபிலைக்கடையும் 'ஷெல' தாக்குதலினால் சேதமடைந்ததுள்ளன

ஆஸ்பத்திரி வீதியிலுள்ள யாழ் கபே மீது நேற்று அதிகாலை ஷெல் விழுந்து முன்பக்கம் பலத்த சேதமடைந்துள்ளது கடையொன்றில் அரிசிமூடைகள் எரிகுண்டு தாக்குதலினால் எரிந்துகணப்பட்டன. சிலகடைகளில் பொருட்கள் முற்றாக சேதமடைந்தன.

இச்சம்பவங்களையடுத்து நேற்று சில கடைகளிலிருந்து மினிராட்டர்களில் சாமான்கள் ஏற்றப்பட்டன.

ஆஸ்பத்திரி வெறிச்சோடியது

யாழ் ஆஸ்பத்திரியில்நேற்று வெளிநோயாளர் பகுதிவெறிச்சோடிக் கிடந்தது அவசர நோயாளிகளுக்கு மட்டும் சிகிச்சையளிக்கப்பட்டது வாட்டிலிருந்து நேற்றும் சிலர் வெளியேறினார்கள் வெளிநோயாளர் பகுதிக்கு மேல்மாடியிலுள்ள 'ஈ என் ரி' கிளினிக் மனநோயாளர் சிகிச்சைப்பிரிவு ஸ்கின் கிளினிக் குழந்தைகள் சிகிச்சைப் பிரிவு எதுவும் இயங்கவில்லை மேல்மாடிக்கு நோயாளிகள் மட்டுமன்றி டாக்டர்களும் செல்ல அனுமதிக்கப்படவில்லை.

பொதுமக்கள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அரசாங்க அதிபர் பிரிவுகளைத் தவிர ஏனைய இடங்களில் நேற்று அதிகாலை ஆறுமணி முதல் அமுல்செய்யப்பட்ட ஊரடங்குச் சட்டம் இன்று காலை ஆறு மணியுடன் தளர்த்தப்படுவதாக அரசு அறிவித்தது. (எ)

ராணுவத்தின்

[1 ம் பக்கத் தொடர்ச்சி]

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

நேற்று அதிகாலை யாழ். கோட்டை இராணுவ முகாமில் இருந்து இராணுவத்தினரால் ஏவப்பட்ட எரிகுண்டினால் யாழ். வர்த்தக ஸ்தாபனங்கள் பல தீக்கிரையாகியுள்ளன இச்செயலின் மூலம் ஒன்றுமறியாத வர்த்தகர்களின் பொருளாதாரத்தை திட்டமிட்டு அழிப்பது அதன் மூலம் தமிழ் மக்களையும் பட்டினிச் சாவுக்கு இரையாக்கும் அரசின் நோக்கம் தெளிவாகியுள்ளது

யாழ் நகரில் சிலதினங்களாக அமைதி நிலை வந்த போதிலும், நேற்று திடீரென கோட்டையில் இருந்து இராணுவத்தினரால் ஏவப்பட்ட எரிகுண்டு வீச்சினால் சமாதானத்தை எப்படி ஏற்படுத்த முடியும், எனவே ஆட்சியாளர்கள் இத்தகைய பயங்கரவாத செயல்களைவிடுத்து பிரச்னைக்கு நிரந்தர சமாதானத் தீர்வு காணமுயலவேண்டும். [வா]

மக்கள் விடுதலை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

போராளி பலியானதாகவும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுளளதாவது :-

முல்லைத்தீவு மாவட்டத்தில் 24 மணிநேர ஊரடங்குச் சட்டத்தை அமுலடுத்திய ஸ்ரீலங்கா அரசின் பட்டாளங்கள் நேற்றுக்காலை பதவியா, கென்பாம், டொலர் பாம், முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் ஆகிய இராணுவ முகாம்களிலிருந்து ஒரே சமயத்தில் தமது திட்டமிட்ட தாக்குதலை நடத்த வெளியே வந்துள்ளனர்

முள்ளியவளை வித்தியானந்தக் கல்லூரியில் மினி முகாம் அமைக்கும் நோக்கில் 8 கவச வண்டிகளிலும் 1ஜீப் வண்டியிலும் வந்த இராணுவத்தினரை எதிர்த்து எமது மக்கள் விடுதலைப்படை நேற்றுக் காலை ஆறுமணியிலிருந்து எதிர்த் தாக்குதல் நடாத்திக் கொண்டிருக்கிறது. இராணுவத்தினருக்கு உதவியாக 2 ஹெலிகொப்டர்கள் 1 பொம்பர் என்பன தாக்குதல் நடாத்தின. மக்கள் விடுதலைப்படை நடாத்திய தாக்குதலால் ஒரு கவசவண்டியும் ஜீப் வண்டி ஒன்றும் முற்றாக சேதமடைந்துள்ளது. இதிலிருந்த 6 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர் இராணுவத்தினருக்கு எதிரான சமரில் மக்கள் விடுதலைப்படைத் தோழன் முகுந்தன் (சந்திரசேகரம்) வீரமரணமடைந்துள்ளான் இராணுவத்தினர் நடத்திய தாக்குதலால் 4 பொதுமக்களும் பலியாகியுள்ளனர்.

முல்லைத்தீவு இராணுவ முகாமில் சுமார் 2000 இராணுவத்தினரும் இராணுவத் தளபாடங்களும் குவிக்கப்படுகின்றன முல்லைத்தீவு கரையோரத்திலும் செம்மலைப் பகுதியிலும் இவ்விரண்டு பீரங்கிப்படகுகள் தாக்குதல் நடத்தியவண்ணமுள்ளன முல்லைத்தீவு மாவட்டத்தில் முடுக்கி விடப்பட்டுள்ள இராணுவத்தினரின் தாக்குதலை எதிர்த்து இறுதிவரை மக்கள் விடுதலைப்படை போரிட்டுவருகிறது. (மா)

தமிழரை பீதியடையச்செய்வதன்மூலம் தனது யோசனைகளை ஏற்க வைக்க அரசுமுயல்கிறது

யாழ்ப்பாணம், வெள்ளி "யாழ் மாவட்டத்தில் இராணுவத்தினரை முகாம் களிலிருந்து வெளியேறவைத்து எம்மக்கள்மீது வெறியாட்டம் நடத்தி பல இனப்படு கொலைகளைப் புரிவதன்மூலமாக மக்களிடையே பீதியை உண்டுபண்ணி மக்கள் மூலமாகவே தமது தீர்மானங்களை ஏற்கவைப்பதற்காக ஜெயவர்த்தனா அரசு முயன்றுவருகிறது."

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளினால் விடுக்கப்பட்ட அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

பெங்களூரில் நடைபெற்ற சார்க் உச்சி மாநாட்டின்போது சென்னையிலிருந்த எமது தலைவர் பிரபாகரன் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியின் விசேட அழைப்பின் பேரில் பெங்களூர் சென்றுள்ளார். அங்கு இந்திய அதிகாரிகளுடன் நடத்திய பேச்சுவார்த்தையின்போது இலங்கை அரசினால் சமர்ப்பிக்கப்பட்ட தீர்வுகளில் ஒன்றான கிழக்கு மாகாணத்தை 3 மாகாண சபைகளாகப் பிரித்தல் சம்பந்தமான தீர்வை முதலாவதாக அந்த மண்டபத்தில் வைத்தே நிராகரித்து விட்டார்.

அதன் பிரதிபலனாக இலங்கை அரசு யாழ், மாவட்டத்தில் ராணுவத்தினரை முகாம்களை விட்டு வெளியேற வைத்து எம்மக்கள்மீது வெறியாட்டம் நடத்தி மக்களிடையே பீதியை உண்டுபண்ணி தமது தீர்மானங்களை ஏற்கவைப்பதற்காக முயன்றுவருகிறது. எனவேதான் நாம் முன்னெச்சரிக்கை நோக்குடன் கடந்த சில தினங்களுக்கு முன்பு யாழ் கோட்டை இராணுவ முகாமை அண்மித்த பகுதிகளிலுள்ள வர்த்தகர்களை அத்தியாவசிய, அன்றாட விநியோகப் பொருட்களை தவிர்ந்த ஏனைய பண்டங்களை பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றச்சொல்லி தெரிவித்திருந்தோம்

இவ்வாறே கடந்த வைகாசி மாதமும் குடாநாட்டின் சகல முகாம்களிலிருந்தும் வெளியேறிய பெருந்தொகையான இராணுவத்தினர் யாழ் குடாநாட்டினுள் நுழைந்து பெரும் அழிவுகளை மேற்கொள்ளுமாகவந்துகொண்டிருந்தவேளை இயக்கரசியலில் வைத்து நாம் பாரிய தாக்குதலை மேற்கொண்டு ராணுவத்தினரை பின்வாங்கவைத்தோம். அத்தாக்குதல் சம்பவத்தின்போதும், குடாநாட்டின் ஏனைய இடங்களில் இடம்பெற்ற சம்பவங்களின்போதும் எமது தரப்பில் 6 அங்கத்தவர்கள் களப்பலியாகினர்.

எமது தலைவர் வே. பிரபாகரன் பெங்களூருக்கு இந்திய அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்த போனதற்குப் பின் நாம் ஏற்கனவே எடுத்த முடிவுக்கும் கொஞ்சமேனும் மாற்றமில்லை. எம்முடைய முடிவில் இருந்து நாம் ஒரு போதும் மாறியது கிடையாது எம்முடைய கடந்த கால வரலாறுகள் சான்று பகரும் திப்பு மாநாட்டிலும்கூட நாம் எமது முடிவிலிருந்து இம்மியளவேனும் மாறவில்லை.

எனவே சில தீய சக்திகள் மக்களுக்கு வேண்டுமென்றே பீதியை ஏற்படுத்தியும், பொய்ப் பிரச்சாரங்களையும் செய்துவருகின்றார்கள் உண்மையான விடுதலைக்கு எதிரான இவர்களையும் இவர்களின் கடந்த கால போராட்ட முறை வாழ்வினை இனம் காட்டிக்கொடுக்கும்; எம்முடைய இறுதி மூச்சுவரை எம் தாயகத்தை காப்போம்.

88-ம் ஆண்டு முதல் சாதாரணதரப் பரீட்சையில் புதிய முறைகள் அறிமுகம்

கொழும்பு, வெள்ளி

கல்வி பொது தராதர (சாதாரணதரப்) பரீட்சையில் 88ம் ஆண்டு முதல் புதிய முறைகள் புகுத்தப்பட வுள்ளன.

இப் புதிய திட்டத்தின் படி தேசிய பாடசாலை அல்லது மாவட்ட மட்டத்தில் பரீட்சைகள் நடத்தப்படவுள்ளன என்று முடிவு அறிவிக்கப் பட்டுள்ளது. தேசிய மட்டத்தில் தாய்மொழி, ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம், சமூகக் கல்வி ஆகிய ஐந்து பாடங்களிலும் மாவட்ட மட்டத்தில் இவற்றுடன் வேறு 4 பாடங்களுக்கு மாத பரீட்சைகள் நடத்தப்படவுள்ளன.

பாடசாலையின் திறமையான மாணவருக்கு வேறொரு பரீட்சையும் நடத்த இப்புதிய திட்டம் வழிவகுக்கிறது. இதன் படி 9, 10, 11ம் வகுப்புகளில் தொடர்ச்சியாக மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படும்.

சாதாரணதரப் பரீட்சை சான்றிதழில் ஒவ்வொரு பாடத்துக்கும் தனித் தனியாகப் புள்ளிகளும், கல்வியல் காட்டும் திறமைக்கு வேறாக புள்ளிகளும் தொடர்ச்சியான மதிப்பீடுகளுக்கு வேறாக புள்ளிகளும் வழங்கப்படவுள்ளன.

இதேவேளை 88ம் ஆண்டு முதல் சமயப்பாடத்திலும் புதிய முறைகள் புகுத்தப்படவுள்ளன. இதன்படி சமய நிறுவனங்களினால் நடத்தப்படும் சமயப் பரீட்சைகளும் அங்கீகரிக்கப்படவுள்ளன. பாடசாலைகளில் சமய பரீட்சைகள் நடைபெறும் அதே வேளையில் மதஸ்தாபனங்களின் பரீட்சையிலும் தோற்ற மாணவர் அனுமதிக்கப்படுவர் இப் பரீட்சையில் மாணவர் களின் பெறு பேறுகளும் க. பொ. த. (சா. த) சான்றிதழில் சேர்த்துக் கொள்ளப்படும் காலத்துக்காலம் இத்தப் பரீட்சைகள் பற்றி கல்வித் திணைக்களம் அறிவிக்கும். [வீ]

இலங்கையரசின் புதிய பிரேரணைகள் முன்னையதைவிட பின்னடைவானதாக உள்ளன

—ஈ. பி. ஆர். எல். எவ். விளக்கம்

யாழ்ப்பாணம் சனி

இலங்கை அரசினால் கடைசியாக முன்வைக்கப்பட்ட பிரேரணைகள் முன்னைய பிரேரணைகளிலும் பார்க்க முன்னேற்றகரமாக அமைவதற்குப்பதிலாக பின்னடைவானதாகவே அமைந்துள்ளன. ஏனெனில் தொடர்ந்தும் அவை வடக்கையும் கிழக்கையும் தனித்தனி இரு மாகாணங்களாகக் குறிப்பிடுவது மாத்திரமில்லாமல் கிழக்கு மாகாணத்தை மூன்று பகுதிகளாகப் பிரிக்கவும் முற்படுகிறது.

இவ்வாறு பெங்களூரில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் தொடர்பாக ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினர் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வறிக்கையில்மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:

அண்மையில் பெங்களூரில் ஸ்ரீலங்கா, இந்திய, தமிழ்நாடு மாநில அரசுகளுக் கிடையிலும் தமிழீழ விடுதலைப் புலிகளிற்குமிடையிலும் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில் நாம் கலந்துகொள்ளாததன் காரணமாக அங்கு முன்வைக்கப்பட்ட பிரேரணைகளின் தன்மைய அதன் உள்ளடக்கத்தை அறிய முடியாதவராக இருக்கின்றோம். இருப்பினும் செய்திதொடர்பு சாதனங்கள் வாயிலாக கடைசியாக முன்வைக்கப்பட்ட பிரேரணைகள் என்பதுபற்றி எமது கருத்துக்களை நாம்தர விரும்புகின்றோம்:

ஈழ தேசிய விடுதலை முன்னணியினால் நவம்பர் 3ந் திகதி தமிழ்நாடு முதலமைச்சர் ஊடாக இந்திய அரசாங்கத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட பேரம்பேசமுடியாத அடிப்படைக்கோரிக்கைகளே எனமுன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் பற்றி இப்பிரேரணைகளின் தொகுதியில் எதுவுமே கிடையாது.

திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களில் உள்ள தமிழ்பிரதேசங்களை வகையறை செய்யும் கடமையை எல்லைநிர்ணய ஆணைக்குழுவொன்றிற்கு ஒப்படைப்பது என்ற யோசனை சரித்திரத்தைமாற்றி எழுதமுற்படுகின்ற ஒருசெயல் என்பதை தெளிவாக்குவது மாத்திரமன்றி, ஈழமக்களுக்கு பாதகமான முறையில் எமது தாயகத்தின் பிரதேச அமைப்பினை மாற்றியமைப்பது மாத்திரமன்றி ஒருமைப்பாட்டையும் தொடர்பினையும் இல்லாமல் செய்ய முற்படுவதுடன் அரசாங்கத்தின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட குடியேற்றத்திட்டத்தினை சட்டபூர்வமானதாக்கவும் முயல்கிறது.

மலையகத்தில் வாழும் தமிழ் மக்களையும், அவர்களால் பல தலைமுறையாகவளர்க்கப்பட்டு அவர்களின் வாழ்நிலமாக கருதப்பட்ட பிரதேசங்களையும் தவிர்த்து இலங்கையின் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியாது என்பதனை நாம் மீண்டும் மீண்டும் பலமுறை வலியுறுத்தி வந்துள்ளோம்.

ஜே. ஆர். அரசாங்கத்துடன் இந்திய அரசாங்கத்தின் நல்லெண்ணத்தின் மூலமாக நேரடிபேச்சுவார்த்தையில் தமிழர் விடுதலைக் கூட்டணி ஈடுபட்ட காரணத்திற்காக ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியோ, தமிழீழ விடுதலைப் புலிகளோ உட்பட ஏனைய விடுதலை இயக்கங்களோ தமிழர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் ஏகபிரதிநிதியாக தமிழர் விடுதலைக் கூட்டணியை ஏற்றுக்கொண்டது கிடையாது.

போராளி மரணம்

யாழ்ப்பாணம், சனி

அம்பாறையில் தேடுதல் வேட்டையில் லீடுபட்டிருந்த கமாண்டோக்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் விடுதலைப் புலிகளின் போராளி ஒருவர் பலியானதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் விடுத்துள்ள அறிக்கையில், வீரமரணமடைந்த குரு [பத்மநாதன் காரைதீவு] என்பவருக்கு தமது வீரவணக்கத்தை தெரிவிப்பதாக குறிப்பிட்டுள்ளது. [மா]

31-ம் நாள் நினைவஞ்சலி

திருமதி மகேஸ்வரி இராசதுரை

தோற்றம்: 6-1-1947

மறைவு: 23-10-1986

அன்பின் திருவுருவாய் பாசத்தின் பிறப்பிடமாய் பண்பின் உறைவிடமாய் திகழ்ந்த எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்கே உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவாற்றாதுயருறும்:
கணவன், மகன்,
சகோதரர்கள்,
சகோதரிகள்,
மைத்துனர்கள்,
மைத்துனிமார்,
பெருமக்கள் மருமக்கள்,
உற்றார், உறவினர்.

புத்தூர் கிழக்கு,
புத்தூர். (C-5948)

மலிவு விற்பனை

அலுமினிய பாத்திரங்கள் விற்றுத் தீர்க்கும் மலிவு விற்பனை.

பிள்ளையார் மெற்றல் வேக்ஸ்
257, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். [C5920

விவசாயிகளே!

உங்கள் வயல்களில் நெல்லுடன் போட்டியிட்டு வளரும் அகன்ற இலைகள், கோரை இன களைகளாகிய சந்தனக் கோரை, சிறு கோரை, கிடச்சி, புளியாரை போன்றவற்றை நெல் விதைத்து 3-ம் கிழமைக்கும் 7-ம் கிழமைக்கும் இடையில்,

● ஹெடோனல் எம் 40% (எம். சி. பி. ஏ.) — 450 மி லி. ரூ. 40/-. 2 லீற்றர் ரூ. 155/-. 4 லீற்றர் ரூ. 295/-.

● ஹெடோனல் எம் 60% (எம். சி. பி. ஏ.) — 500 மி லி. ரூ. 62/-. 2 லீற்றர் ரூ. 245/-. 4 லீற்றர் ரூ 470/-.

பாவித்து சிறப்பான களைக்கட்டுப்பாட்டை ஏற்படுத்தி கூடிய விளைச்சலை உறுதி செய்து கொள்ளுங்கள்.

பாயர் இரசாயனம் விவசாயிகளின் பெருவிளைச்சலின் உறுதுணை.

BAYER

ஹேகெம் லிமிட்டெட்,

400, டீன்ஸ் வீதி, கொழும்பு – 10.

இது ஒரு மேற்கு ஜேர்மன் தயாரிப்பு.

[A-2864]

நாவலர் குருபூசை

யாழ்ப்பாணம், சனி

காரைநகர் மணிவாசகர் சபை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குருபூசையும் வழிபாடும் எதிர்வரும் 24ம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் மேற்படி சபை மண்டபத்தில் திரு. செ. தேவதாசன் தலைமையில் நடைபெறவுள்ளன. [சி]

காணவில்லை

செல்வி செல்வராணி (ராணி)

செல்வராணி வயது 18 உயரம் 5' முன்பற்கள் இரண்டு இல்லை; இறுதியாகக் கவுண் (முழுச் சட்டை) அணிந்திருந்தார். விவேகம் குறைவு. பொதுநிறம்; 14-11-86 காலை முதல் காணாமல் போய்விட்டார்; இவரைக் கண்டவர்கள் அல்லது வைத்திருப்பவர்கள் கீழ்க்கண்ட முகவரிக்குத் தயவுசெய்து தொடர்பு கொள்ளவும்.

ஏ. ஜெயராஜா,
2/1, மருதடி வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
(C 5931)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அருள்நேசன் நல்லையா
[கேசவன் வீரவேங்கை-பளை]

மலர்வு: 23 2 1965
உதிர்வு: 3-12-1985

வானகத்து தாரகையே
பலையீந்த தமிழ்மகனே!
தாயகத்து உரிமைமீட்க
புறப்பட்ட நீ புலியனமே
சிங்கத்தின் காதலனில்
-துவக்கு
கொடுத்த வேட்டுக்கள்
உன் அங்கத்தை குண்டி
னால் அழிப்பினும்
குடும்பத்துக்கோர்
குலவிளக்காய்
இன்றும் நீ எம் மனத்தில்
திகழ்கின்றாய்.

ஆத்மா சாந்திஅடைய
பிரார்த்திக்கும்:
அப்பா, அம்மா,
அண்ணா, அக்காமார்,
அத்தான்மார், தம்பி,
தங்கை, மருமக்கள், உற்
றார், உறவினர்;
[C5933]

எட்டாவது நெஞ்சின அலைகள்

வே.இ. தம்பிப்பிள்ளை

தோற்றம்: 22-11-1928
மறைவு: 22-11-1978
திதி: 24-11-1986

காரைநகர் பாலாவோடையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், கிளிநொச்சிவர்த்தகரும், குடும்பவாழ்க்கையில்கண்ணியமும் கட்டொழுங்கு காட்டி உறவு வாழ்க்கையில் உள்ளுணர்ந்த பாசம் பேணி வாழ்ந்தும் வாழ்வித்தும் வானுறையும் தெய்வத்துள் புகுந்த புண்ணியராம் எம்குல முதல்வர் அன்னைமடியில் அன்றே ஆண்டவன் அடியில் சேர்ந்தார். ஆன்மா பேரின்பத்துள் திளைத்து மகிழ்ந்து மலர திருவருளின் திருவடிகளைச் சிந்தித்து பிரார்த்திக்கின்றோம். மனைவி, மக்கள், மருமக்கள், பேரன், உற்றார், உறவினர், ஸ்தாபனத்தில் கடமை புரிபவர்கள்;
(C 5934)

இன்றைய பலன்

மாதம்- கார்த்திகை
திகதி 6 (22 - 11 - 86)
கிழமை- சனி
திதி- ஷஷ்டி பி. இ. வரை
நடசத்திரம்- பூசம் பி. இ. வரை

மேடம்: பதவியுயர்வு கிடைக்கலாம். புதிய வாகனம் கொள்முதல் செய்ய உகந்த தினம். நன்மையான மாற்றங்களும் மேற்கொள்ளப்படலாம்.

இடபம்: உள்ளத்தில் உவகை துள்ளும். வணிகர்கள் அதிக ஆதாயம் பெறுவர். குடும்பத்திலும் மகிழ்ச்சி தென்படும்.

மிதுனம்: நிச்சயமற்ற நிலையால் வேதனைப்படுவீர்கள். எதிர்பார்த்த விடயம் தடைப்படும் சிலர் வாழ்க்கையில் புரிவுத்துயர்வாட்டும்.

கடகம்: மோதவரும் பகை. மோசடியும் நடக்கும். மனதிலும் அமைதி குன்றும்.

சிங்கம்: காதலர் - பெரு மகிழ்ச்சியடைவர் பிரிந்தவர்கள் வாழ்க்கையில் மீண்டும் இணைவர். கடமையில் உற்சாகம் பிறக்கும்

கன்னி: பிரயாணத்தைப் பின்போடவும் பிறர் விடயத்தில் தலையிடாதிருக்கவும். தொழிலில் போட்டி மனப்பான்மையைத் தவிர்க்கவும்.

துலாம்: தொழில் புரியும் இடத்தில் செல்வாக்குப் பெருகும். தாய்வழிப்பெருமையுண்டு வரவிலும் திருப்தியுண்டு;

விருச்சிகம்; உவகை தரும் சம்பவங்கள் இடம்பெறும். கொள்கை வழி வாழ்க்கையை வளப்படுத்தும். எதிர்பார்த்த விடயம் இன்று கைகூடலாம்.

தனுசு: சிந்தனைக்களை தாக்கும். சூழ்ச்சி வலை விரிக்கப்படும். பிணிக்கு இடங்கொடாதிருக்கவும்.

மகரம்; இல்லம் பல்கலைக் கழகமாக மாறும். வாழ்க்கையில் காதல் கணை தாக்கும் செய்தொழில் சிறப்புண்டு

கும்பம்: துன்பத்தின் நிழலாட்டம் உங்களைத் தொடரும். வாகனம் செலுத்துவோர் அவதானம் வேண்டும். கடமையும் சோர்வடையும்.

மீனம்: எதிலும் முன்னணியில் நிற்பீர்கள். புதிய பாதையில் வீறுநடை போடுவீர்கள் வெளியிடத்துத் தொடர்பும் கிட்டும்.

திருமலை
வே. ரவீந்திரன்

63-ம நாள் நினைவஞ்சலி

தம்பையா கணேந்திரராசா

மலர்வு; 29-02-1952
உதிர்வு: 21-09-1986
திதி: 22-11-1986

அன்பின் திருவுருவே. எங்கள் குலக்கொழுந்தே, கோமளமே பொன்னும் பொருளும்சட்டிவருவாய் நீ என்று நம்பி இருந்தோம். உன் உயிர் பறிக்கப்பட்டது;

உன் பிரிவால் வாடும்: அப்பா, அம்மா, அத்தான்மார், அக்காமார். தம்பிமார், தங்கைமார், மருமக்கள், மாமன்மார் மற்றும் உற்றார் ,உறவினர்கள்.

அளவெட்டி வடக்கு,
(C 5940) அளவெட்டி;

எட்டாவது ஆண்டு நினைவஞ்சலி

காலக்காற்றில் சருகாய்
விழுந்தீர்
காலங்கள் அழிந்தாலும்
நினைவிலிருப்பீர்

செல்வன் மரியநாயகம் ஹென்றி (ஜெகநாதன்)

மண்ணுக்குவரவு:
15-07-1952
விண்ணுக்கு விரைவு:
28-11-1978
திதி: 28-11-1986

எம்மையெல்லாம் தவிக்கவிட்டு நீர் ஓடோடிச் சென்று எட்டு ஆண்டுகளும் பூர்த்தியாகி விட்டதாமே எம் அன்புச் செல்வமே மெய்தானோ விளம்பு. நீரின் குமிழியாகும் நிலையில்லாத வாழ்வது நிமிஷம் தோறும் காத்திருக்கும் எமனின் பாசக்கயிறு மின்னாமல் முழங்காமல் சொல்லாமல் கொள்ளாமல் காய்த்துக் கனியாமல் விதியென்ற கொடிய சூறாவளியினால் எம்மைப்பட்ட மரமாக்கிவிட்டு சிரித்த படிசென்று விட்டீரே செல்வமே! இப்படியொரு மனம் உமக்கு இருந்தது என்று நம்பவே முடியவில்லை. இங்ஙனம் உமது பிரிவால் துயருறும்:

தாய், தகப்பன், மனைவி, மகன், மாமன், மாமி, சகோதரன் உற்றார், உறவினர்.

7/3, மத்திய கிழக்கு வீதி,
றெக்ளமேஷன்
யாழ்ப்பாணம். C 5888

இலவசம்! நலச் செழுமை நிறைந்த 8,000 அற்புத பாத்திரங்கள்



இதோ, ஒரு நற்செய்தி
புரோட்டீன் செறிந்த குட்டிப் பயறுப் பயில்வானின் உருவம் உட்புறத்தில்
பொறிக்கப்பட்ட எழில் மிக்க 8000 நெஸ்டம் பீங்கான் பாத்திரங்கள்
நாடெங்கும் நெஸ்டம் பாவனையாளர்களுக்கு வழங்கப்பட இருக்கின்றன.

பயறுப் பயில்வானைக் கண்டுபிடித்து நெஸ்டம் பாத்திரத்தை வெல்லுங்கள்!

நீங்கள் வாங்கும் ஒவ்வொரு நெஸ்டம் பக்கெட்டிலும் ஊட்டச் சத்து
பற்றிய தகவல்களும் குடும்பப் பெண்களுக்குப் பயனுள்ள விபரங்களும்
படவிளக்கங்களோடு அடங்கிய அட்டை ஒன்று காணப்படும்.

இந்த அட்டையில் புரோட்டீன் செறிந்த பயறுப்
பயில்வானின் படம் இருந்தால் நீங்கள் அதிஷ்டசாலி!
எழிலான பீங்கான் பாத்திரம் ஒன்று உங்களுக்குக் கிடைக்கும்

இலவச பாத்திரங்களை வழங்கும்
வியாபாரிகளின் பட்டியலும் அதே பக்கெட்டில் இருக்கும்.
எனவே, அண்மையிலுள்ள வியாபாரியிடம் 'வெற்றி
அட்டை'யைச் சமர்ப்பித்து உங்கள் பாத்திரத்தைப் பெறுங்கள்

அதேவேளையில், நெஸ்டம் மனையியல்
குறிப்பு' அட்டைகளையும் சேகரித்துப் பயனடையுங்கள்.

தொடர்ந்து நெஸ்டம் வாங்கிப் புசியுங்கள்.
அதிஷ்டம் இருந்தால் பல நெஸ்டம்
பாத்திரங்களை வெல்லலாம். குடும்பத்திலுள்ள
அனைவருக்குமே பாத்திரம் கிடைக்கலாம்.

நெஸ்டம்

பாத்திரம் நிறைந்த நலச் செழுமை

விலை: ரூ 26/=

அனுமதிப்பத்திர இல: S/544

JWT NL 2052

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY
சனிக்கிழமை 22-11-86

நான் எப்போதும் இஸ்ரேல் ஜெனரல் ஒருவரையே பின்பற்றுகிறேன்-கிட்டு

யாழ்ப்பாணம், சனி

'இஸ்ரேல் ஜெனரல் ஒருவரின் ஆலோசனையை, பின்பற்றியே நான் நடந்து கொள்கிறேன் இந்த ஜெனரல்பற்றி நான் முன்பு வாசித்துள்ளேன். அவர் பின்னால் ஒருபோதும் நின்றுகொண்டு கட்டளை பிறப்பிப்பதில்லை அவர் எப்பொழுதும் முன்னுக்கு நின்று கொண்டே, 'வா' என்று சத்தமிடுவார்; அவர் ஒருபோதும் பின்னுக்கு நின்று கொண்டு முன்னுக்கு போ எனப் படையினரை பணிப்பதில்லை.'

'புரொன் லைன்' பத்திரிகையாளர் டி. பி எஸ். ஜெயராஜுக்கு அளித்த பேட்டி ஒன்றின்போது யாழ். குடாநாட்டு புலிகள் தளபதி கிட்டு இவ்வாறு தெரிவித்தார்:

'சில பொதுமக்கள் நீங்கள் எப்போதும், ஆபத்தின் மத்தியில் நடமாடுகிறீர்களென வும், நீங்கள் ஒரு டரக் வண்டியிலிருந்து ஹெலிகொப்டரை நோக்கி சுட்டதை நாங்கள் கண்டதாகவும், எங்கேயாவது ஷெல் தாக்குதல் நடைபெறும்போது நீங்கள் அவ்விடத்தில் நிற்பதாகவும் கூறினார்கள் நீங்கள் ஏன் அவ்வாறு நடந்து கொள்கிறீர்களென நிருபர் கேட்ட கேள்விக்கு அவர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

இப் பேட்டியின்போது திருகிட்டு மேலும் தெரிவித்ததாவது எமது போராளிகளிலும் பார்க்க அரச துருப்பினர் எண்ணிக்கையில் அதிகமாகவுள்ளனர், அவர்களிடம் நவீன ஆயுதங்கள் திறமையான தளபாடங்கள் உண்டு. ஆனால் எம்மிடம் மனோவலிமைத் தைரியம் உண்டு. நாங்கள்ர்க இறப்பதற்குத்தயார். அவர்கள் இறப்பதற்குத் தயாரில்லை.

அவர்கள் முகாமிலிருந்து வெளியே வருவதில்லை ஏனெனில் நாங்கள் எமது கடைசிப் போராளி இருக்கும் வரையில் போராடுவோம் என அவர்களிற்குத் தெரியும், அவர்களின் இழப்புக்கள் அதிகமாகவே இருக்கும். (கே)

சுமுகத்தீர்வுக்கு ஆலோசனை

நல்லூர், வெள்ளி

யாழ் பல்கலைக்கழக மாணவர்களின் உண்ணாவிரதப்போராட்டம் மூன்றாவது நாளைக் கடந்துகொண்டிருக்கும் இவ்வேளையில் இனப்பிரச்னையை சுமுகமான முறையில் சமாதானமாகத் தீர்த்து வைக்கும் முயற்சியாக நேற்றுமாலை யாழ் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தினர் ஆலோசனை நடாத்தினர்.

கவின்கலை அரங்க நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம் சனி

தமிழர் கலாசார அவையினரின் கவின்கலை அரங்கம் வாராந்த கலை நிகழ்ச்சிகள் நாளை வின்சர் கலை அரங்கில் நடைபெறவுள்ளன.

இசை அரங்கு: வீணை இசை செல்வன் சுரேஸ் கந்தன்

வில்லிசை: கலாவிநோதன் திரு. நா. கணபதிப்பிள்ளை [சின்னமணி] குழுவினரின் 'தமிழர் தாயகம்' [மா]

பஸ் விபத்தில் 30 பேர் பலி

புதுடில்லி நவ 21

கர்நாடக மாநிலத்தில் இன்று நிகழ்ந்த பஸ்விபத்தொன்றில் பத்துப் பெண்கள் பன்னிரண்டு சிறுவர்கள் உட்பட முப்பதுபேர் பலியானார்கள். எட்டுப்பேர் காயமடைந்தனர்.

கோவா நோக்கிச் சென்று கொண்டிருந்த பிரயாணிகள் பஸ்ஸே விபத்துக்குள்ளானதாகவும் இதில் சுமார் ஐம்பதுக்கு மேற்பட்ட பிரயாணிகள் பிரயாணம் செய்தனர் என்றும் அறியப்படுகின்றது.

"சூழ்நிலையைப் பயன்படுத்தி அத்தியாவசியப் பொருட்களின் விலையை அதிகரிக்கவேண்டாம்"

யாழ்ப்பாணம், சனி

"அரசினால் திட்டமிட்டுச் செயல்படுத்தப்பட்டு வரும் இக்கட்டான சூழ்நிலையை பயன்படுத்தி அத்தியாவசிய பொருள்களுக்கு தட்டுப்பாட்டை ஏற்படுத்தாதிருக்க உதவுமாறும், பொருள்களுக்கான விலையை நியாயமற்ற முறையில் அதிகரிக்காது இருக்குமாறும் விற்பனையில் ஈடுபட்டுள்ள சகல வர்த்தகர்களுக்கும் வேண்டுகோள் விடுக்கின்றோம்."

இவ்வாறு ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் விலைக்கட்டுப்பாட்டு கண்காணிப்புக் குழு விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

"ஸ்ரீலங்கா அரசு பேச்சுவார்த்தை என்ற நாடகத்தை ஆடிக்கொண்டே ஈழமக்களை இன ஒழிப்பு வேலையில் தனது ராணுவத்தை ஈடுபடுத்த மும்முரமான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறது எனவும் அவ்வித தாக்குதல்களுக்கு முகம் கொடுக்க தமிழ் மக்கள் தயாராக இரும்பது அவசியம் எனவும் எமது ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி பத்திரிகை அறிக்கைமூலம் எச்சரிக்கையொன்றை சில தினங்களுக்கு முன் விடுத்திருந்ததை தமிழ் மக்கள் நன்கு அறிவர்.

"எமது எச்சரிக்கையை மெய்ப்பிப்பது போன்று தொடர்ச்சியான ஷெல்தாக்குதல்கள் நடைபெறுவதற்கான அறிகுறிகள் தென்படத் தொடங்கியுள்ளன. எமது எச்சரிக்கையைத் தொடர்ந்து யாழ். நகர வர்த்தகப் பிரமுகர்கள் தமது ஸ்தாபனங்களில் உள்ள சகல பொருட்களையும், அத்தியாவசிய பொருட்கள் உட்பட அப்புறப்படுத்திப் பாதுகாப்பான இடங்களுக்கு எடுத்துச் செல்வதை நாம் அவதானிக்கிறோம்.

இவ்வாறான இக்கட்டான கால கட்டத்தில் பாவனையாளர்கள் தமக்கு தேவையான அத்தியாவசியப்பொருட்களை வாங்கி சேமிப்பதில் கூடிய அக்கறையும் அவசரமும் காட்டுகிறார்கள். இந்த சூழ்நிலையை சில தீயசக்திகள் தமக்கு சாதகமாக பயன்படுத்தி அத்தியாவசியப் பொருட்களுக்கான செயற்கைத் தட்டுப்பாடு ஒன்றை ஏற்படுத்த முனைவதாக எமக்குப் புகார்கள் கிடைத்துள்ளன.

அரசின் பல்வேறு ஒடுக்கு முறைகளினால் துன்பதுயரங்களுக்கு உள்ளாக்கப்பட்டுள்ள மக்களை மேலும் இன்னல்களுக்குள்ளாக்காதவாறு பாதுகாப்பது எமது கடமையாகும்."

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் கிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1986-ம் ஆண்டு நவம்பர் மாதம் 22-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது
Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/1003/81 Eelanadu P O. Box 49. Telegram Eelanadu Telephone: 22389—24126

முஸ்லிம்-தமிழ் கலவரம் ஏற்படுத்த முயற்சி

[மட்டக்களப்பு நிருபர்]

தமிழ்-முஸ்லிம் மக்களிடையே மீண்டும் இனக்கலவரத்தை ஏற்படுத்தும் நடவடிக்கைகளில் ஆயுதப்படையினர் ஈடுபட்டு வருவதாகத் தெரிய வந்துள்ளது.

வாழைச்சேனைப் பகுதியில் முஸ்லிம்கள் வேடம்தாங்கிய கமோண்டோக்கள் சிலர் தமிழர்களின் வீடுகளுக்குள் புகுந்து துப்பாக்கிகளால் சுட்டுத் தள்ளினராம் இச்சம்பவத்தால் 3 தமிழர்கள் பலியானதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இரத்தப் புற்றுநோய்க்கு மருந்து

லண்டன், நவம்.

இரத்தப் புற்று நோயை குணப்படுத்துவதற்கான புதிய மருந்தொன்றை பிரிட்டிஷ் விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ளனர்.

இம்மருந்து அடுத்த ஆண்டு பிரிட்டனிலும், அமெரிக்காவிலும் பரிசோதிக்கப்பட்ட பின் பாவனைக்கு வரும் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

எலிகள் மீது மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகள் வெற்றியளித்ததை தொடர்ந்தே இம்மருந்து பாவனைக்குவர இருக்கிறது. (சி)

கடத்தப்பட்டனர்

[மட்டக்களப்பு நிருபர்]

மட்டக்களப்பு நகரிலுள்ள பிரபல வர்த்தகர்கள் நால்வர் இனந்தெரியாத நபர்களினால் கடத்தப்பட்டுள்ளனர்.

நேற்றுக் காலை இக்கடத்தல் சம்பவம் இடம்பெற்றது.

சண்முகம் [ரஜேஸ்வரி ஸ்ரோர்ஸ்], குமாரசாமி[குபேரன் ஏ ஜெஸ்ஸி), சண்முகராசா [ஆஞ்சநேயர் மரடிப்போ], ஏ.ஆர். இராஜேந்திரம் ஆகியோரே கடத்தப்பட்டவர்களாவர். [மா]

பாராளுமன்றத்தில் வெளியிடப்படவில்லை

கொழும்பு வெள்ளி

இலங்கை இனப்பிரச்னை தீர்வு தொடர்பாக அண்மையில் ஜனாதிபதி ஜெயவர்த்தனா இந்திய பிரதமர் திரு ராஜீவ் காந்தியுடன் பெங்களூரில் நடத்திய பேச்சுவார்த்தை பற்றியவிபரம் எதுவும் நேற்று பாராளுமன்றத்தில் வெளியிடப்படவில்லை.

எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பெங்களூர் பேச்சுவார்த்தை பற்றிய விபரங்களை வெளியிடுமாறு பாராளுமன்றத்தில் வற்புறுத்தியதையடுத்து நேற்று இவ்விபரங்களை வெளியிடுவதாக பிரதமர் பிரேமதாசா தெரிவித்திருந்தார்.

எனினும் சமாதானப் பேச்சுவார்த்தைகள் இருதரப்பினருக்குமிடையில் தொடர்ந்து நடைபெற்றுவருதாக கூறிய பிரதமர் இவ்விபரங்களை வெளியிடவில்லை. [சி]

மரண அறிவித்தல்

கந்தையா அன்னமுத்து

குரும்பசிட்டி திருமதி கந்தையா அன்னமுத்து 21-11-86ல் காலமானார். இவர் காலஞ்சென்ற கந்தையாவின் மனைவியும் திருமதி நல்லம்மா, திருமதி அன்னம்மா ஆகியோரின் அன்புத்தாயாரும், திரு மு. இராமலிங்கம், திரு. மு குணரத்தினம் ஆகியோரின் மாமியாரும், திருமதி ம மங்களராணி, செல்வி கு மங்களவதனி, திருமதி கி சிவதேவி ஆகியோரின் பேர்த்தியாருமாவர். அன்னாரின் ஈமைக்கிரியை இன்று 22-11-86 பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் இச்செய்தியை ஏற்றுக்கொள்ளவும்

[C 5954] தகவல்: மு. இராமலிங்கம்.

திரு. வீரசிங்கம் சிவப்பிரகாசம்
கோப்பாய்

கோப்பாய் தெற்கு, பழம்றோட்டைச் சேர்ந்த இளைப்பாறிய கலால் அத்தியட்சகர் வீரசிங்கம் சிவப்பிரகாசம் காலமானார் இவர் உலகநாயகியின் (ஆசிரியை யாழ் பாரதி பாஷா வித்தியாசாலை) அன்புக்கணவரும், சியாமளா, சிவரஞ்சித், சிவகுமார், சிவராஜ் [நோர்வே], சிவரவீன் [யாழ்:பரியோவான் கல்லூரி] ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் 23-11-86 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2-00 மணிக்கு அன்னாரது இல்லத்திற் நடைபெற்று கோப்பாய் மயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச்செல்லப்படும். இதனை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

பழம் றோட், கோப்பாய் தெற்கு.

[C5953] தகவல்: குடும்பத்தினர்.

அருணாசலம் குலநாயகம்

21-11-86 ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமான அன்னாரின் ஈமைக்கிரியைகள் [24-11-86] திங்கட்கிமை காலை 11 மணியளவில் உரும்பராய் எருளன் மயானத்தில் நடைபெறும். தகவல்:

(C 5947] திருமதி சிவஞானம் குலநாயகம்.

மரண அறிவித்தல்

கந்தையா ஐயாத்துரை

கரவெட்டி வடக்கு வதிரியைச் சேர்ந்தவரும் முன்னைநாள் நெல்லியடி பட்டினசபை உபதலைவருமான கந்தையா ஐயாத்துரை 1986-11-14ந் திகதி அகால மரணமடைந்துள்ளார். இவர் வள்ளிப்பிள்ளையின் அன்புக்கணவரும் இராசதுரை (U.K), தங்கத்துரை (கூட்டுறவு இலாகா யாழ்ப்பாணம்) அழகதுரை (வாழைச்சேனை காகித ஆலை), பொன்னுத்துரை (UK) திருமதி யோகாம்விகை செல்வராசா BRUNEI, அருமைத்துரை (U K) ஆகியோரின் அன்புத் தந்தையும், செல்வராசா (BRUNEI) புஷ்பகாந்திமலர், வசந்தா, பாமா, யோகராணி U K ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் (மலேசியா), கனகம்மா ஆகியோரின் அன்புச்சகோதரருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 1986-11-23ந் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் வதிரி ஆலங்கட்டை மயானத்தில் தகனக்கிரியைகள் நடைபெறும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் எல்லோரும் ஏற்றுக்கொள்ளவும்.

[C 5937] தகவல்: ஐ. தங்கத்துரை.

சாமுவேல் சின்னத்துரை

திரு. சாமுவேல் சின்னத்துரை காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற இருதயமணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற அப்யா, எலினம்மா ஆகியோரின் பெறாமகனும், ஜெயசோதி, ஜெயராணி, ஜெயமலர், ஜெயதேவி ஜெயமனோகரன், ஜெயறஞ்சினி, ஜெயக்குமார், ஜெயந்திரன், ஜெயமாலதி ஆகியோரின் அன்புத் தந்தையும், யோசெப் சொலமன், ஜெயராஜா சந்திரசேகரம் ஆகியோரின் அன்புமாமனாரும், சின்னராசா காலஞ்சென்ற ஞானப்பிரகாசம், செல்வம், நல்லையா, நவமணி ஆகியோரின் சகோதரரும், சந்திரிக்கா, சந்திரகுமார், சந்திரீபன், சஜிவன், பிரியந்தன் ஆகியோரின் பேரனுமாவர் அன்னாரின் பூதவுடல் ஞாயிற்றுக்கிழமை (23-11-86) காலை 10 மணிக்கு பரியோவான் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். 11, கோவில் வீதி, ஒழுங்கை,

(C 5955) யாழ்ப்பாணம்.